கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] பிரமாதீசஷூ தைமீ [பகுதி-ங.

Vol. XII. January—February. 1914. No. 3.

அரசகேசரி.

இவர் இற்றைக்கு முந்நூற்றைம்பதுவருடங்களுக்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்த ஓர் அரசிளங்குமரரும், புலவர்பெருந்தகையுமாவர். முன்னாள் முச்சங்கங்கொண்டு தமிழைவளர்த்த பாண்டியர்கள்போல, நெடுங்காலமாக யாழ்ப்பாணத்திலிருந்து தமிழைவளர்த்த ஆரியச்சக்கிரவர்த்திகளதுமரபில் உதித்தவர். வடமொழி தென்மொழிகளில்வல்ல வித்வன்மணிகளாகிய பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் மன்னர்பெருந்தகைகளுக்கு மருகர். இவ்வரசிளங்குமரர், வடமொழி தென்மொழிகளிலே தக்கபாண்டித்தியமுடையரும், காவியசாத்திரவிநோதருமாயிருந்தமையால், இராச்சியபரிபாலனசிரமமின்றிப் பிறிதொருமாளிகையின்கண்ணே தனித்துறைவாராயினர். இவர் வாசஞ்செய்த இடம் இப்பொழுது "அரசகேசரிவளவு" என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. இது நல்லூரின்கண் உள்ளது. இவ்வாரியச்சக்கிரவர்த்திகள் நல்லூர் என்னும் இடத்தையே இராசதானியாக்கி அரசுபுரிந்தனர். இவர்களுடைய இராசமாளிகைகளும், பிறவும் இருந்த இடம் இப்பொழுது "சங்கிலிதோப்பு" என்னும் பெயரால் வழங்கப்படும் மிகப்பெரிய நிலப்பரப்பாகும். இவ்வம்சத்துக்கடைசியரசன் பரராசசேகரனது காமக்கிழத்திமகனாகிய சங்கிலி என்பவனாதலின் இவ்விடம் அவன்பெயரால் வழங்கப்படுவதாயிற்று. இங்கே பழைய அரண்மனைவாயிற்கோபுரமும், இலமடைந்த பழையமாளிகைகளது சுவர்களும், "யமுனாஏரி" என்னும் முப்புடைக்கூபமும், பிறவும் காணப்படும். இவ்வரசர்வரலாறுகளும், இவர்கள் விரும்பியவாறு தொண்டைமண்டல முதலிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில்

வந்துவசித்த வேளாளப்பிரபுக்களதுவரலாறுகளும், பிறவும் "கைலாசமாலை" "யாழ்ப்பாணவைபவமாலை" "வையாபாடல்" முதலிய பழையசரித்திரநூல்களிலே காணப்படும். பரராசசேகரன், செகராசசேகரன் என்பார், செந்தமிழ்ச்சங்கமொன்றுதாபித்து, தமதுமுன்னோர்போல, யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வியை விருத்தி செய்தனர். இவர்காலத்திலே யாழ்ப்பாணம் செந்தமிழணங்கிற்குத் திருவரங்காயிற்று என்பர். இவ்விருவரும் அக்காலத்திருந்த சங்கப் புலவர்களைக்கொண்டு பலநூல்களை இயற்றுவித்ததோடு, தாமும் "பரராசசேகரம்," "செகராசசேகரம்" என்று தத்தம் பெயரால் ஒவ்வொருநூல் இயற்றினர். "பரராசசேகரம்" மிகச்சிறந்த வைத்திய நூல். இதிற் சிற்சிலபாகங்களே யாழ்ப்பாணத்துள்ள சிற்சில பாம்பரைவைத்தியர்களிடம் காணப்படுகின்றன. மற்றைய "செகராசசேகரம்" சோதிடநூல். இஃது அச்சிடப்பட்டுப் பலராலும் படிக்கப்பட்டுவருகின்றது. ஏனைய சங்கப்புலவர் இயற்றியநூல்களும், முன்னிருந்த சம்ஸ்தானவித்வான்கள் இயற்றிய நூல்களும், யாழ்ப்பாணம் போர்த்துக்கேயமன்னர்கைப்பட்ட பிற்றைநாட்களில் அன்னவர் கொடுங்கோன்மையாற் சிதைந்துபோயின. இக்கொடுங்கோன் மன்னர் யாழ்ப்பாணத்துச் சைவாலயங்களுக்கும், சமயாசாரத்துக்கும் விளைத்த தீமைகள் அளவிடற்கரியன. இவ்வாரியச்சக்கிரவர்த்திகளுக்கு அமைச்சராயினுரெல்லாம் தமிழ்ப்புலமையினும் மிகச்சிறந்தோராவர். இவர்களுள் ஒருவர்பாடிய சிலவெண்பாக்கள் "யாழ்ப்பாணவைபவமாலை" என்னும் நூலிற் காணப்படும். அடியார்க்குநல்லாரும் இவ்வமைச்சருள் ஒருவர் என்பர். இவர், செந்தமிழ்ப்பரிபாலனத்திலும், தமிழ்ப்புலமையிலும் சிறந்த குணபூஷணசிங்கையாரியச்சக்கிரவர்த்திக்கு அமைச்சராயிருந்தவர். இத்துணைப் பெருஞ்சிறப்பினையுடைய இவ் வாரியச்சக்கிரவர்த்திகளதுமரபில் உதித்த அரசகேசரியார், தமது மாதுலராகிய பரராசசேகரமகாராசாவுடைய அநுமதப்படி, வடமொழியிலே காளிதாசமகாகவி இயற்றிய இரகுவம்சம் என்னுங்காவியத்தைத் தமிழிலே பாடினர். அது பின்வரும் செய்யுட்களால் அறியப்படும்.

வன்றிசைக்காளிதாசன்வடமொழி
தென்றிசைத்தமிழானனிசெப்புகேன்

நன்றிசைக்குமுரைவழிநன்னெடுங்
குன்றிசைப்பதுபோலுங்குறிப்பரோ,

இன்னகாதையியன்றவிரும்பொருட்
டுன்னுசெஞ்சொற்றுகடபுதுாயநூல்
பன்னுசெஞ்சொற்பரராசசேகர
மன்னனின்பமனங்கொளவாய்ந்ததே.

(இரகுவம். பாயிரம்-அ; கூ)

இவர், இராசமாளிகைக்குச்சமீபத்திலே உள்ள ஒரு செந்தாமரைவாவியினருகே புதிதாகஅமைக்கப்பட்ட ஒரு வைசித்திரியமான மாளிகையின் மேன்மாடத்துவீற்றிருந்து இந்நூலைப்பாடினாரென்பர். இத்தாமரைப்படுகர் "நாயன்மார்கட்டு" என்னும் இடத்திலுள்ளது. இவ்விடம், முன் அடியார்க்குநல்லார் என்னும் புலவர்திலகரால் அறுபான்மும்மைநாயன்மாருக்குத் திருமடம் அமைத்து மாகேசுரபூசை செய்விக்கப்பட்டுவந்தமையால், பிற்றைநாளில் "நாயன்மார்கட்டு" என வழங்கப்படுவதாயிற்று. இந்நூலின்கண் இடையிடையே காணப்படுகின்ற கற்பனாலங்காரமமைந்த சில செய்யுட்களும், இவர், செந்தாமரைப்படுகரின் பாங்கரிலிருந்துபாடிய உண்மையை ஒருவாறு புலப்படுத்துவனவாகும்.

இட்டமெத்தியவெய்யவரிடுக்கண்வந்திறுத்தால்
முட்டவத்தலைப்பகைவராகுவரெனமுன்னோர்
பட்டுரைத்தனகாட்டுமாபானுவாற்பரியுங்
கட்டகட்டலைக்கொட்டைவான்சரோருகக்களையே.

பச்சடைப்பதுமத்ததிபாங்குறப்பாய்காற்பாணி
நிச்சயமருத்துச்செய்யநீலங்கணெக்குநோக்க
அச்சிலதேரைவாய்விட்டரற்றமெல்லணையினுய
கச்சபவெரின்மீதேறிக்கம்புசூல்கழிக்குமன்றே.

(நாட்டுப்—25—46.)

இந்நூல், சொல்லணி பொருளணிகள் நிரம்பி, அரிதினுணர்தற்பாலனவாகிய சொற்றொடர்களும், சொற்களும் மலியப்பெற்று விளங்குகின்றது. இந்நூலிற்காணப்படும் பிரயோகங்களும், பிறவும்

நூலாசிரியர் வடநூல்களிலும், தொல்காப்பியம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய தமிழ்நூல்களிலும் மிக்க பரிசயமுடையார் என்பதை நன்குபுலப்படுத்தும். பாயிரச்செய்யுட்கள் கம்பராமாயணப் பாயிரச்செய்யுட்களது போக்கும் நோக்கும் உடையன. ஆற்றுப்படலச்செய்யுட்களும், நாட்டுப்படல நகரப்படலச் செய்யுட்களும், விநோதம்பயப்பயப்பனவாக அமைக்கப்பட்டுச், சிலேடைமுதலிய பலபொருளணிகளுக்கு இடனாய், ஆன்றபொருள் தந்து பொலிகின்றன. நாட்டுப்படலத்திலே, திணைமயக்கம், மற்றைய காவியப்புலவர்களிலும் மிகவிநோதமாகப் பாடப்பட்டுள்ள தென்பது அச்செய்யுட்களை நுண்ணிதின் ஆராயுமிடத்துப் புலப்படும். திக்குவிசயப்படலத்திலுள்ள அநேக செய்யுட்கள், கற்பனாலங்காரங்களையெல்லாம் நன்றிசைக்குமுரைவழிநன்னெடுங் குன்றிசைப்பதுபோல முதனூலில் இருந்தவாறே நன்குதெரித்துநிற்பன. சீதைவனம்புகுபடலத்திலுள்ள செவ்விய மதுரஞ்சேர்ந்த சீரிய செய்யுட்களும், அதற்குப்பின்னுள்ள மற்றையபடலச்செய்யுட்களும் கம்பராமாயணத்துக் கூறப்படாதுவிடப்பட்ட அரிய விஷயங்களையெல்லாம் எடுத்துக்கூறுவனவாகும். அது, "கற்றார் கவியின் பெரிதாந்தமிழ்க் கம்பநாட, னுற்றாங் குரைத்தா னுரையாதன வோதுகிற்பாம்" என்பதனானு மறியப்படும் (இரகு. திருவவ. ருகூ) இந்நூல் யாழ்ப்பாணத்திலே பண்டைக்காலந்தொட்டு, ஆசிரியமாணாக்கபாரம்பரையாகக் கற்கப்பட்டுவருகின்றது. இற்றைக்கு நூறுவருடங்களுக்குமுன் இருந்த இருபாலை நெல்லைநாதபண்டிதர், மாதகல் சிற்றம்பலப்புலவர் முதலிய காவியப்புலமைவாய்ந்த பண்டிதர்கள் இந்நூலின்கண்ணே மிக்க பரிசயமுடையராய், இதனை அநேக மாணவர்களுக்குக் கற்பித்துவந்தார்கள் என்பது கர்னபரம்பரை. நெல்லைநாதபண்டிதர்குமாரராகிய மஹாவித்வான் சேனாதிராயமுதலியாரிடத்திலே இந்நூலைக் கிரமமாகக்கேட்டுணர்ந்த நல்லூர்வித்வான் சரவணமுத்துமுதலியார் என்பார், இதற்கு ஒரு பொழிப்புரை எழுதிவந்தனர் என்றும், இடையிலே அவர் சிவபதமடைந்துவிட்டமையின் அது பூர்த்தியாகவில்லை என்றும், அவ்வுரையிற் பெரும்பாகம் அவரது மாணவர்சிலர்க்குப் பயன்படுவதாயிற்று என்றும் இப்பொழுதைப்புலவர்சிலர் கூறுவர். இந்நூலிலே, திக்குவிசயப்படலத்தி

ளுள்ள கற்பனாலங்காரங்களமைந்தசெய்யுட்களுள்ளே சிலவற்றை, வடமொழி தென்மொழிகளில்வல்லார் படித்துமகிழுமாறு, அம்முத னூற்சுலோகங்களோடு எழுதுகின்றாம்.

𑌸 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌗𑌰𑍁𑌣𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌂 𑌬𑌭𑍌 ।
𑌦𑌿𑌨𑌾𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑌵𑌿𑌤𑍍𑌰𑍇𑌵 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ॥

கனைகழல்வீரனுங்காவலான்றரு
புனைமணிமுடியொடும்பொலிந்துதோன்றினான்
தினகரன்றிவாந்தகாலத்திற்சேர்த்திய
இனவொளியொடுகனலிலங்கிற்றென்னவே. (திக்குவி. க.)

𑌦𑌿𑌲𑍀𑌪𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 𑌤𑌂 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌧𑍂𑌮𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

நிமிர்தருமிசையினான்றன்னைநேர்ந்துமுன்
இமிர்தருபுகைக்கனலென்றுநோக்கிய
அமரிடுமதிபலவரசர்பின்னர்தந்
தமரொடுமடுஞ்சிகைத்தழலினோக்கினார். (திக்குவி. உ.)

𑌛𑌾𑌯𑌾𑌮𑌣𑍍𑌡𑌲𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌣 𑌤𑌮𑌦𑍃𑌶𑍍𑌯𑌾 𑌕𑌿𑌲 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌾 𑌪𑌦𑍍𑌮𑌾𑌤𑌪𑌤𑍍𑌰𑍇𑌣 𑌭𑍇𑌜𑍇 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ॥

இச்சையாங்கட்புலப்படாளென்றெண்ணினும்
நிச்சமாமன்னவனிறைந்ததேசெனுங்
கைச்சரோருகத்திடைவிளங்குங்கஞ்சமென்
பிச்சமேகொடுதிருப்பெரிதுபேணினாள். (திக்குவி. ங.)

𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌾𑌂𑌨𑌿𑌧𑍍𑌯𑌾 𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌵𑌨𑍍𑌦𑌿𑌷𑍁 ।
𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌰𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌭𑌿𑌰𑍁𑌪𑌤𑌸𑍍𑌥𑍇 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ॥

குருதிநாறொளிறுவேன்மன்னன்கொற்றமே
கருதிநாவலர்தநாவுறைந்துகாமரு
பரிதிநாண்மலர்ப்பொகுட்டுறையும்பார்தரு
சுருதிநாயகன்மயிறுதிப்பதாயினாள். (திக்குவி. ச.)

மநுப்ரப்ருதிபிர்மாந்யைர்புக்தா யத்யபி ராஜபி: ।
ததாப்யநந்யபூர்வேவ தஸ்மிந்நாஸீத்வஸுந்தரா ॥

ஒருமனுமுதலியமன்னரொண்புய
மறுதடைந்திடினுமொர்காலுமன்றலைப்
பெறுளெனப்புதுமணம்பெற்றபெற்றியின்
நறுமலர்ப்புயம்புவிமங்கைநண்ணினள். (திக்குவி. ௫)

ஸ ஸேநாம் மஹதீம் கர்ஷந் பூர்வஸாகரகாமிநீம் ।
பபௌ ஹரஜடாப்ரஷ்டாம் கங்காமிவ பகீரத: ॥

விறன்மிகும்படைதொடர்ந்திடக்கீட்டிசைவேலை
திறனினுக்குபுசென்றிடுந்திங்கள்வெண்குடையோன்
பெறலருந்தவப்பெற்றியின்வரநதிபின்னர்
உறநடந்திடும்பகீரதன்றன்னையுமொத்தான். (திக்குவி. ௫௬)

ஆபாதபத்மப்ரணதா: கலமா இவ தே ரகும் ।
பலை: ஸம்வர்தயாமாஸுருத்காதப்ரதிரோபிதா: ॥

வீறுபட்டுடையதானைவேந்தனால்வீயாவீயும்
ஊறுபட்டுடைந்துமீளவுய்ந்துளமன்னரெல்லாம்
சேறுபட்டைம்பூகல்குஞ்செய்யிடைப்பறித்துமீள
நாறுபட்டனபைங்கூழினன்பலநல்கினாரே. (திக்குவி. ௬௮)

சுலோகத்துள்ள சிலேடைப்பொருளமைந்தபாகங்களெல்லாம் இச்செய்யுளில் நன்குவிளக்கப்பட்டமை காண்க.

ஸ ப்ரதாபம் மஹேந்த்ரஸ்ய மூர்த்நி தீக்ஷ்ணம் ந்யவேஶயத் ।
அங்குஶம் த்விரதஸ்யேவ யந்தா கம்பீரவேதிந: ॥

அத்தலையரசர்கோமானதோரணரடக்குவான்செங்
கைத்தலத்தெடுத்தவள்வாயங்குசங்கந்துசீறும்
பித்திவர்மத்தமாவின்மத்தகம்பிறங்கிற்றென்ன
வைத்தனன்விசயச்சின்னமயேந்திரத்துச்சிமாதோ. (திக்கு. ௭௧)

கம்பீரவேதி என்பது யானைவிசேடம். அது பாகன்சொல்லைப் பொருட்படுத்தாத இயல்புடையது. இரத்தம் ஒழுகும்படி

தோலைப்புண்படுத்தியவிடத்தும் நிலைதளம்பாது நிற்பது. அதன் மத்தகத்திலே அங்குசத்தைநாட்டுதல் மிகஅரியசெயலாயிருத்தல் போல், இரகுவும் வலியமகேந்திரத்துச்சியில் தன்பிரதாபத்தைநாட்டியது மிக அரியசெயல் என்பது கருத்து. இச்செய்யுளிலே "கந்து சிறும் பித்திவர்மதமா" என்பதனுல் ஸம்ஹீரவெழி என்பது விளக்கப்பட்டது.

[illegible]
[illegible]

மிடறொருகாவுயர்பரிவெள்ளத்தின்குரம்
இடறவேலஞ்சிதைந்தெழுந்தநுண்பொடி
அடறவாமதமணமடங்கவானையின்
கொடிமுவார்கரடமதடைத்தல்கூடுமே. (திக்குவி. கஉ0)

அடல் ஈண்டுத் துல்லியகந்தமுடைமையை உணர்த்திநின்றது.

[illegible]
[illegible]

ஆங்கொளிச்சரளத்திற்பிணித்தவானையின்
பூங்கதிர்ச்சங்கிலியதனிற்போகிய
ஓங்கெரிமாத்தடஞ்சுடர்களோவற
வீங்கிருளிரவிற்கேவிளக்கமாகுமே. (திக்குவி. உருஎ)

[illegible]
[illegible]

அன்னவர்விழவையச்சமரினேடழித்து
உன்னியவிழவிலராக்கியொண்புகழ்
கின்னரர்பாடவுண்மகிழ்ந்துகேட்டனன்
தன்னிகரிலாவடற்றனைவீரனே. (திக்குவி. உகூக)

இமயமலைவாசிகள் கவலைசிறிதுமின்றி என்றும் மகிழ்ச்சியேயுடையராதலின் உத்சவசங்கேதர் எனப்பட்டார் என்பர். இதற்கு முந்தியசெய்யுளிலே "உத்சவசங்கேதர்" என்பது கூறப்பட்டமை

யால் இங்கே "அன்னவர்" எனச் சுட்டியொழிந்தார். பாஹு + ஜய + உதாஹரணம் = புயங்களது வெற்றியின் விருத்தாந்தத்தை. விருத்தாந்தம் = புகழ். புயவலியின் விருத்தாந்தமென்பது இச் செய்யுளில் "ஒண்புகழ்" என்பதனாலும், "தன்னிகரிலாவடற்றுணை வீரன்" என்பதனாலும் விளக்கப்பட்டது. "உன்னியவிழவிலராக்கி" என்பதனால் "விரதோத்ஸவாந்" என்பது விளக்கப்பட்டது.

பரஸ்வரேணவிஜ்ஞாதஸ்வேஷு பாயநவாணிஷு ।
ராஜ்ஞாஹிதேஷு தஸ்ஸாரோ ராஜ்ஞஸ்ஸாரோ ஹிதோத்ருணா ॥

சீற்றமிற்றன்னவர்திறைசொரிந்தனர்
சாற்றருமன்னற்குஞ்சயிலநாதற்கும்
மாற்றரும்பெருந்தனவளர்வும்வெஞ்சமர்
ஆற்றலுந்தனித்தனியறியப்பட்டவே. (திக்குவி. ௨௯௨)

இச்செய்யுளிலே "மாற்றரும்பெருந்தனவளர்வு" என்றதனால் ஹிதேத: ஸார: என்பதும், "வெஞ்சமராற்றல்" என்றதனால் ராஜ்ஞ: ஸார: என்பதும் விளக்கப்பட்டன. உபாயநவாணிஷு என்பது "திறைசொரிந்தனர்" என்பதனால் விளக்கப்பட்டது.

கத்ராக்ஷோஹ்யம்யபாராஸிநிவேஶ்யாவர்த்ரோஹஸ: ।
பௌலஸ்த்யஸ்ஸ்ரீதஸ்யாத்ரௌ ராஜயாநஜவஹிரயம் ॥

வித்தகவம்மலைநின்றுவெம்முடி
பத்துளனெலெடுபட்டவெள்ளிவெண்
அத்திரிதனிற்புகாததற்குநாணிலே
வைத்திடுவான்புகழ்வாய்ப்பமீள்வுரு. (திக்குவி, ௨௯௩)

பௌலஸ்த்யஸ்ஸ்ரீதஸ்யாத்ரௌ என்பது "முடிபத்துளனெலெடு பட்டவெள்ளிவெண்ணத்திரிதனில்" என்பதனால் விளக்கப்பட்டது. பௌலஸ்தியன்—புலத்தியன்பௌத்திரனாகிய இராவணன்.

இன்னும் இவைபோல முழுவதும் மொழிபெயர்ப்பாக அமைந்தனவும், முதனூற்சுலோகங்களின் சிற்சிலபாகங்களை மொழிபெயர்த்துப் பாடப்பட்டனவுமாக இடையிடையே காணப்படுஞ் செய்யுட்களும் பல. அவையெல்லாம் அவ்விருநூல்களையும் ஒருங்குவைத்து

இலைப்புரைகிளைப்பார்க்கு எளிதிற் புலப்படுவனவாகும். குசன் அயோத்திசெல்படலம், குலமுறைப்படலம் என்பவற்றிலுள்ள செய்யுட்களுள்ளே மடக்கு என்னும் சொல்லலங்காரவகைகள் அமைத்துப் பாடப்பட்டனவும் பல. அவற்றையும், மாலையீட்டுப்படலம், கடிமணப்படலம் என்பவற்றிலுள்ள சுற்பனலங்காரங்கள்மலிந்த மற்றையசெய்யுட்களையும் படித்துமகிழ்தல் வடமொழி தென்மொழிகளில்வல்லபண்டிதர்கள் கடன். ஈண்டுவிரிப்பிற் பெருகும். குலமுறைப்படலத்துக்குப் பின்னுள்ள வரலாறுகளும் இவ்வாறு பாடப்பட்டுள்ளன என்பது கர்னபரம்பரை. அவைகளும் மற்றையநூல்கள்போலப் பிற்றைநாளிற் சிதைந்தனபோலும். பின்வரும் குலமுறைப்படலத்திறுதிச்செய்யுளும் அங்ஙனம் பாடப்பட்ட உண்மையை நன்குபுலப்படுத்தும்.

கலைப்படாநின் றவிக்குவாகுவின்மாபின்காட்சித்
தலைப்படாநின்றவேந்தர்தம்பெருந்தகையநீதி
வலைப்படாநெகிநல்லோரறிவெனும்வாய்மைதன்னுள்
நிலைப்படாவிவன்றன்வெய்யநீர்மையைநிகழ்த்துகிற்பாம்.

இந்நூல் இப்பொழுதும் யாழ்ப்பாணத்திலே, வடமொழிதென்மொழிகளில்வல்லபண்டிதரும், பரோபகாரப்பண்பினருமாகிய சுன்னாகம் ஸ்ரீமாந் அ. குமாரசுவாமிப்புலவராலும், பிறராலும் கற்பிக்கப்பட்டுவருகின்றது. புலவரவர்கள் "இரகுவம்மிசக்கருப்பொருள்" என்னும் பெயரோடு, இந்நூலிலுள்ள சில அருஞ்செய்யுள்களுக்கும், அருந்தொடர்களுக்கும் பொருளெழுதி வெளியிட்டுமுள்ளார்கள்.

இதுகாறுங்கூறியவாற்றால், அரசகேசரி யென்னும் புலவர் பெருந்தகையினது வமிசவரலாறும், அவர்பாரம்பரையினராகிய ஆரியச்சக்கிரவர்த்திகளது செந்தமிழ்ப்பரிபாலனச் செயல்களும், அவர் இயற்றிய இரகுவம்மிசம் என்னும் பெருங்காப்பியத்தினது சிறப்புக்களும், அவரது வடமொழி தென்மொழிவன்மையும், பிறவும் சிற்றறிவிற்கெட்டியவளவில் ஒருவாறு விளக்கப்பட்டன.

கொழும்பு.

இங்ஙனம்,
தென்கோவை, ச. கந்தையபிள்ளை.

தமிழ்நூல்களும் தமிழகமும்

:(o):

(௩அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பாண்டவ கௌரவ யுத்தம்நடந்தபொழுது சேரன் அச்சேனை கட்கு உணவளித்தனனென்பது வெற்றுரையல்லவென்பதூஉம், கிறிஸ்தவாப்தவாரம்ப முதற்கொண்டே வழங்கிவருகின்றதென்ப தூஉம்,

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன்"

என்னுஞ் சிலப்பதிகாரவடிகளான் (காதை XXIX. பக்கம் 489) இனிதுபெறப்படுகின்றதுகொண்டு கி. மு. 1400 வருடங்கட்கு முன்னரே இவர்களிருந்தனரென்பது துணிபு.

இஃது எவ்வாறாயினுமாகுக, இப்பொழுது வெளியிடப்பட் டிருக்குஞ் சங்கநூல்களுக்குள், புறநானூற்றிலுள்ள சிலசெய்யுட் களாவது வெகுபுராதனமானவையென்றுகொள்ளற் கிடமாகின்றது. பண்டைநாட்புலவர்கள் தாங்கள் புகழ்ந்துபாடும் மன்னர்களை அவர் களதுநாட்டிற்செல்லும் ஆற்றிலுள்ளமணலைக்காட்டினு மதிகநாள் வாழக்கடவனென்றுவாழ்த்துதல் இயல்பாகக்காணுங் காட்சியாம். உதாரணமாக "சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தானும், தாமப்பல் கண்ணனும் வட்டுப்பொருவுழிக் கைகரப்பவெகுண்டு வட்டுக்கொண் டெறிந்தானைச் சோழன்மகனல்லையென நாணியிருந்தானைத் தாமப் பல்கண்ணனார்பாடிய" புறம் 43-வது செய்யுளினீற்றில்,

"...............சிறக்கநின் னாயுள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே"

என்றும், சிலப்பதிகாரம் xxviii-வது காதை 125, 126 வரிகளிற் சேரனை இளங்கோவடிகள்,

"மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள்
தண்ணார் பொருநை* மணலினுஞ் சிறக்க"

*பொருநை யென்பது பெரியாறு என்பர் V. கனகசபைப்பிள்ளை.

என்றும், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார்பாடிய புறம் 9-வது செய்யுளில்,

> "எங்கோ வாழிய குடுமி தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவி னெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

என்றும் கூறியிருத்தல்காண்க.

இவ்வாறு பாவலர் புரவலர்களைவாழ்த்தும்போது ஜீவநதியைக் கூறியிருக்க, இப்பாண்டியனைமாத்திரம் அவனுடனிருந்தபுலவர் அப்பொழுது ஜீவநதியாகவில்லாதவொன்றைக்கூறி வாழ்த்தியிருப்பா ரென்றுகொள்ளுதல் தகுதியன்றாம். மற்றைப்புலவர்கள் வைகை, காவிரி, பொருனை நதிகளைக் கூறியிருப்பதுபோல், இவரும் பஃறுளி யைக் கூறியிருப்பதுகொண்டு இப்புலவர்பெருமான், அது ஜீவநதி யாகவிருந்து கடல்கொள்ளுதற்குமுற்பட்டவரென்றுகொள்ளுதலே யமைவுடைத்தாம்.

இவ்விந்தியதேசத்தில், பாண்டியநாட்டிற்கு முக்கியமானநதி யாகவிருந்ததும், பிறகு கடல்கொள்ளப்பட்டதும் பஃறுளியே யென்று உரையாசிரியர்களாலும், சங்கப்புலவர்களாலும் ஆங்காங் குக் கூறப்படுகின்றதைக் காண்கிறோம். தமது சிலப்பதிகாரவுரையில் "கடல்பொருது பின்னொருகாலத்து அவனது(பாண்டியனது) தென் றிசைக்கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகியபக்கமலைகளை யுடைய குமரிக்கோட்டையும் கொண்டதனால்"† என்று அடியார்க்கு நல்லாரும் "அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல் காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற் கும் குமரியென்னுமாற்றிற்கு மிடையே எழுநூற்றுக்காவதவாறும் ....இந்த நாற்பத்தொன்பதுநாடும், குமரி, கொல்லமுத லிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலால்" என்றும், "கட

† சிலப்பதிகாரம் பக்கம் 265.

லகத்துப்பட்டுக் குமரியாறு பனைநாட்டோடு கெடுவதற்குமுன்" என்றும் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும், (தொல்-பொருள். ப. 809) "கடல்கொள்வதன்முன்பு பிறநாடும் உண்மையிற் றெற்கும் எல்லைகூறப்பட்டது" என்று இளம்பூரணரும், (தொல், இளம்பூரணம் எழுத்து. பக் 4) "அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது" என்று அகப்பொருளுரை எழுதித்தீட்டிய நீலகண்டனாரும் கூறுபவாதலின், இவை யுண்மைக்குமாறாமோ? இதைத் தானே!

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
புலியோடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாயர்..............

என்று கலித்தொகையும், (முல்லைக்கலி 4)

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு"

எனவும், (சிலப்பதிகாரம். VIII-வது காதை. வரி 1, 2)

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமையமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

எனவும் சிலப்பதிகாரமும் கூறும். (காதை XI. வரி 18-22. பக். 257)

இதற் குரைகண்ட அடியார்க்குநல்லாரும் "அங்ஙனமாகிய நிலக் குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும், சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமும், என்னு மிவற்றை இழந்தநாட்டிற்காக ஆண்ட தென்னவன்" (பக் 265-266) என்றார். இவ்வாறு கலித்தொகையினுஞ் சிலப்பதிகாரத்தினும், பாண்டிநன்னாடு கடல்வாய்ப் பட்டகாலத்துச் சேர சோழநாடுகளைக் கைப்பற்றி அவனாண்டுவந்தனனென்பது மூன்றுஞ்சங்கத்துமிற்றிருந்த புலவரான் ஒப்புக் கொள்ளப்பட்டவிடயமாம். முற்கூறப்பட்டவிடயங்களைக்கொண்டு,

புறநானூற்றுச்செய்யுட்கள் சிலவற்றிற் பஃறுளி கூறப்பட்டிருத்தலால் அவற்றையியற்றினோர் பஃறுளி நதியாயிருந்தகாலத்திலிருந்தோரெனக்கொள்ளுதல் இழுக்காகாது. கடைச்சங்ககாலம் கி. மு. முதலாவது நூற்றாண்டென்றுகொள்ளினும், இக்காரியங்கள் கதையாகவழங்கப் பன்னாட்கள்சென்றிருக்கவேண்டுமாகலின், இப்பாக்கள் கி. மு. 6, 7-வது நூற்றாண்டுகளிற் கூறப்பட்டனவெனக்கொள்ளுதல் பொருத்தமுடையதொன்றாம்.

தொல்காப்பியம் இதற்கு முற்பட்டதாயிராவிடினும், இக்காலத்ததாகவாவ திருத்தல்வேண்டுமென்றுகொள்ளுதலமைவுடைத்தாம். இத்தொல்காப்பியமானது முதல் இடை கடை என்னு முச்சங்களினு நிலவியதென்பது தமிழாசிரியருமறிந்தவிடயமாம். அஃதுண்மையாயின், இவ்விலக்கணம் இரண்டாஞ்சங்ககாலத்துக் கபாடபுரம் கடலாலழிக்கப்பட்டகாலத்துக்கு முந்தியதன்றோ? ஸ்ரீ வான்மீகியாருந் தமது பிரசித்தகிரந்தத்தில், அநுமான் சீதாபிராட்டியைத் தேடிச்சென்றகாலத்துளதிர்ப்பட்டிருக்கக்கூடியதான கபாடபுரத்தைப்பற்றி வர்ணித்திருக்கின்றனர்.*

மதுரையாவது வைகையாவது அக்காலத்துச் சிறப்புடையதன்றாயினமைபற்றி, ருஷீசுவரர் அவைகளைப்பற்றிக் கூறினாரிலர். வான்மீகிபகவான் கி. மு. 6-வது நூற்றாண்டிலிருந்ததாக ஐரோப்பியராலும் இந்தியராலும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளப்படுகிறது. நமது பூர்வகாலவழக்கு, பாண்டியர் கவாடபுரத்தை இராஜதானியாக்கிக் கொள்வதற்குமுன்னரே தொல்காப்பியம் செய்யப்பட்டதென்பதாம். இது நிச்சயமெனக்கொள்வோமாயின், தொல்காப்பியகாலம், வான்மீகருக்குஇரண்டுநூற்றாண்டுமுன்னரென்றுவதுகொள்ளவேண்டும். இப்பொழுது அசசிடப்பட்டிருக்கும் சங்கநூல்களிற்பயிலும் வடமொழிப்பதங்களைக்காட்டினும் அருகியே தொல்காப்பியத்திற்

---

* "ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம் ।
யுக்தம் கவாடம் பாண்ட்யானாம் கதா த்ரக்ஷ்யத வானராः" ॥
கிஷ்கிந்தாகாண்டம் 41-வது ஸர்க்கம். 19-வது ஸ்லோகம்.

வான்மீகரும் தென்னாடும் என்பதைப்பார்க்க. (செந்தமிழ்த்தொகுதி—எ. பக்கம்—ககக—கரு௨.)

காணப்படுவதுகொண்டு அதன்பழமை நிச்சயிக்கப்படலாம். ஆயி னும் அக்காலத்துத் தமிழாசிரியர்கள் வடமொழி நன்கறிந்திருந்தன ரென்பதும், தொல்காப்பியரே தமிழையடைந்த ஆரியரென்பதும் உண்மைச்செய்திகளாம். அவரது ஒருசாலைமாணுக்கராகிய பனம் பாரனுர், ஐந்திரநிறைந்த தொல்காப்பியனென்ருன்றிப் பாணினீய நிறைந்ததொல்காப்பியனென்று கூறிஞரிலர். பாணினீயம் அக்கா லத்துத் தோன்றியிருக்குமாயின், அதனைக் கூருதுபோந்ததற்கும், அப்படிப்பட்ட உத்கிருஷ்டகிரந்தத்தை யெடுத்தாளாததற்கும் கார ணங்கூறவேண்டியிருக்கின்றது. இதுகொண்டே தொல்காப்பியர் பாணினிக்குப் பன்னூற்ருண்டுகட்குமுன்னர்த் தொல்காப்பியத்தை எழுதிஞரென்ப. பாணினிபகவான் கி. மு. 4-வது நூற்ருண்டிலிருந்த தாகக்கொள்ளப்படுகின்றதாகலின், அதற்கு 3, 4 நூற்ருண்டுகட்கு முன்னராவது இந்நூ லெழுதப்பட்டிருக்கவேண்டும். இப்படி அங்கு மிங்குமாகக்கூறும்நியாயங்கள் இதனை வலியுறுத்தப் போதாவேனும், எல்லாவற்றையு மொன்றுகூட்டிநோக்கின் அதனு லுண்டாகும் யோசனைகளையும் முடிபையும் தவிர்த்தற்கின்ரும். நற்காலமாக, இவைகளொடின்றி, தொல்காப்பியத்தினுள்ளேயே போதியவாதாரங் கள் பொதிந்துகிடக்கின்றன. சங்கநூல்கள் தொகுக்கப்படுவதற்கு வெகுகாலங்களுக்குமுற்பட்ட திதுவென்பது முண்மை. பதிற்றுப் பத்துப்போன்றவைகளின் தொன்மை நூலின்றுவக்கத்திலேயே விளங்குகின்றது. இவைகளிற்ரெகுக்கப்பட்டுள்ளபாக்கள்முழுவதும் கடைச்சங்கநாளி லுண்டாகியதன்று என்பது உறுதிப்பட்டதொன் ரும். இவை தமிழணங்கையலங்கரித்தற்கென்று கங்கணம்புனைந்த பெரியோர்பலராற் ரெகுக்கப்பட்டுப் போற்றப்பட்டதாகும். இயேசு பிறப்பதற்குமுன்னரே கடைச்சங்கம்முற்றி அதன்வயோதிககாலம் தலைப்பட்டுவிட்டதென்பதும், கி. பி. முதனூற்ருண்டில் அது செல் காலமாகக்கருதப்பட்டதென்பதும் சரித்திரவுண்மை. இதுகொண்டு அதன் மத்தியகாலமல்லது சிறப்புற்ரேங்கியகாலம் இதற்கு 3, 4 நூற்ருண்டாவது சென்றிருக்கவேண்டுமென்றல் பொருத்தமுடைத் தேயாம். இவைகளன்றி, சங்கநூல்களிற் பிற்காலத்தனவற்றுள், ஒல்காப்பெருமைத் தொல்காப்பியத்துக்குப் புறம்பானபதங்கள் பல பயிலுதலைக் காண்கின்ரேம். அவற்றிற் சிலகாட்டுதும். தொல்காப் பியம் எழுத்ததிகாரத்தே,

"சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அ,ஐ, ஔவெனு மூன்றலங் கடையே" சூ 29.

"ஆ, எ, ஒ வெனு மூவுயிர் ஞகாரத் துரிய" சூ 31.

"ஆவோ டல்லது யகரமுத லாது." சூ 32.

என்று ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரஞ்செய்தமையின் கடைச்சங்ககாலத்துத்தா னவர்காலமென்றாவது, தொல்காப்பியம் இயற்றப்பட்டதென்றாவது கொள்வோமாயின், அவைகளில் இப்பதங்கள் சாதாரணமாகப் பயின்றிருக்கவேண்டும். அவ்வாறின்றி இலக்கண வழுவான,

சமைத்து	(சிலப்பதிகாரம். பக்கம் 31. வரி 14.)
சம்பு	(மதுரைக்காஞ்சி வரி 172)
சதுக்கம்.	(திருமுருகாற்றுப்படை வரி 225)
சந்தி	(ஷை ஷை ஷை)
சமம்	(ஷை வரி 99)
சலம்	(மதுரைக்காஞ்சி வரி 112)
சவட்டி	(பெரும்பாண் 217, பதிற்றுப்பத்து செ. 84)
சந்து	(மலைபடுகடாம் வரி-393)
சதங்கை	(சிந்தாமணி சுரமஞ்சரி. செய். 40)
சங்கு	(ஷை காந்தருவதத்தை. செய். 55)
ஞமலி	(புறம் செய். 74, பட்டினப்பாலை வரி 140)
ஞமன்	(ஷை 6)
ஞிமிறு	(ஷை 93)
ஞாலல்	(பதிற். செய். 30, திருமுருகு வரி 120)
யவனர்	(பதிற். 2-வதுபதிகம் நெடுநெல்வாடை வரி 101, முல்லைப்பாட்டு வரி 61)
யூபம்	(புறம் செய். 15, 224, பதிற்றுப்பத்து செய். 67, மதுரைக்காஞ்சி வரி 27)
யூகம்	(திருமுருகு வரி 302)

இப்பதங்கள் மலிந்திருக்கக் காண்கிறோம்.

இவைகளிலும் புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்துப்போன்றவைகளிற் சிறுபான்மைபயின்றுவர, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலைபோன்றவைகளிற் பெரும்பான்மை பயின்றுவருகின்றனவென்பது அதனைப் படிப்போருக்குத் தெள்ளிதாம். மேற்கூறியவாறு, தொல்காப்பியர் இக்காலத்தவராயின், இப்பதங்களைப்பற்றி யொருவிதியு மெழுதாதுவிட்டிருக்கமாட்டாரென்பது திண்ணம். இதுகொண்டு அவர் இக்காலத்து (கடைச்சங்ககாலத்து) இருந்தவரல்லரென்பதூஉம், தொல்காப்பியம் சிறப்புற்றோங்கியது கடைச்சங்ககாலத்திற்கு வெகுநாண்முன்னரென்பதூஉம் உள்ளங்கைநெல்லிக்கனியாகும் ஒருபாஷையின் இலக்கணம் ஒருவிதமாயிருக்கும்போது, அதற்குப் புறம்பாயபதங்களும், மொழிகளும் அதன்காலத்தேபயிலுதல் இயல்பன்றாம். இப்பதங்கள் ஒவ்வொன்றாக, இழிபதங்களாகப் பிரயோகத்திற்குவந்து மெதுவாகப் பல்லோராலும் வழங்கப்பட்டு நிலைநின்றபிறகு கற்றுவல்லார்களிதனை யுபயோகிக்கத்தலைப்படுவரென்பது ஒருதலையாகலானும் அப்படிவழங்க அநேகநாட்செல்லுமாகலானும், இவர்காலத்து இவைகள்வழங்கப்பட்டதில்லையென்பதும், அதனானே இலக்கணம் காணப்படுதலில்லையென்பதும் துணிபாம்.

இஃதன்றி, "சட்டி, சள்ளை, சமை எனவும், 'சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே,' 'தையலாய்சம ழாதுரை யென்றதே' எனவும் சகரமொழிக்குமுதலாய்வந்தவாறு காண்க. இவை............ஆசிரியர் (தொல்காப்பியர்) விலக்கலின், அக்காலம் மொழிக்குமுதலாகாது; விலக்கியசகரம் பிற்காலத்துவழங்கியதாயிற்று" (சொல் பக் 275) என்றும், "அதொளி, இதொளி, உதொளி எனவும், குயின் எனவும் நின்ற விவை ஒருகாலத்துளவாகி, இக்காலத்திலவாயின............ அவை ஆசிரியர் தொல்காப்பியர் நூல்செய்தகாலத் துளவாயினும், கடைச்சங்கத்தார்காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினும், தொகையினும், அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள்செய்திலர்" (பொருள் செய் பக் 637) என்றும் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும், "சம்பு, சள்ளை எனவரும். இவை தொன்றுதொட்டுவந்தன வாயின் முதலாகக்காத்துட்..........................விலக்கா ராசிரியர்

அதனு லவை பிற்காலத்துத்தோன்றியசொல்லாமென்பது." (தொல். சொல் சகஅ-ஆம் சூத்திரவுரை.) என மற்றேருரைகாரராகிய சேனு வரையரும் எழுதிப்போந்தனர்.

ஆகலான் தொல்காப்பியர் கடைச்சங்ககாலத்திற்கு வெகுகால முன்னரேயிருந்தவரென்பதும், அக்காலத்தே எழுதப்பட்ட தொல் காப்பியத்திற்கும், பிற்காலத்திற்கு மிடையில் வெகுபதங்கள் தோன் றுவது இயற்கையென்பதும், இனிதுவிளங்குவதாம், மனிதனைப் போன்று பாஷையும்வளர்ச்சியுடையதொன்றும்; அதற்குச்சக்தியுள்ள மட்டும் அது வளர்ச்சிக்கு இடம்பெறவேண்டும்; ஒன்று வளருவதா யின் அது முன்னைக்காட்டிலும் பேதப்படக்காண்ட லியல்பே. ஒரு குழவியை மாணிக்கத்தொட்டிலிலிட்டாட்டினும், அதன்பொருட்டுக் குழந்தையின்வளர்ச்சி குன்றுமோ!

இன்னு மொரு உதாரணமாத்திரங் காட்டுவோம். தொல்காப் பியர் யாப்பைப் பொருளதிகாரத்து ஒரு இயலாகவைத்துளார்; கடைச்சங்கநாளில் அதுவும் ஒருஅதிகாரமாகும்படியான பெருமை யையடைந்ததையறிகிறேம். இதுதானே! யாப்பைப்பற்றித் தனி யாகக் காக்கைபாடினீயம்போன்ற நூல்களுந்தோன்றின. ஆகையான் வெகுகாலத்திற்குமுன்னர்த் தொல்காப்பியரிருந்தனரென்றுகூறுவிடி னும், அவர் கி. மு. 6, 7-வது நூற்றுண்டுகளி, லிருந்தனரென்பது இழுக்காகாது. தொல்காப்பியத்தைப்பற்றி மற்றொரு முக்கியமான விஷயம் கூறுதுவிடுவதற்கில்லை. தொல்காப்பியத்துக்குமுந்தி அநேக விலக்கியங்களு மிலக்கணங்களு மிருந்தனவென்று தொல்காப்பியத் தைக்கொண்டே கூறுவதற்கிடனுகின்றது.

தொல்காப்பியச் செய்யுளியலில்,

"நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"

என்றுகூறுபவாகலின், இந்நூல்செய்தற்குவேண்டிய அநுகூலங் களைச்செய்யக்கூடிய பலநூல்களிருந்தனவென்பது சித்தாந்தமாம். தொல்காப்பியப்பாயிரத்திலு மிது நன்குவிளக்கப்பட்டிருக்கின்றது. சிவஞானமுனிவரும் தமது பாயிரவிருத்தியுள் "தமிழ்கூறுநல்லுல கத்து வழக்கினையும் செய்யுளினையு மாராய்ந்த பெரியகாரணத்தானே

அவற்றின்கண்ணவாகிய எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும், பொருளிலக்கணமும் ஆராய்ந்து செந்தமிழ்உண்மையைப் பொருந்தியுணரும்பொருட்டு அச்செந்தமிழ்நிலத்து முற்பட்டுத்தோன்றும் நூலினைநோக்கி, அந்நூலிற்கிடந்த இலக்கணம் பிற்காலத்தாருணருமுறைமைப்படக்கருதி நூலைத் தொகுத்துச்செய்தான் (தொல்காப்பியன்) என்பர்.

தமிழர் கி. மு. 7-வது நூற்றாண்டுக்குமுன்னரே நாகரீகம்பழுத்தவர்களாயிருந்திருக்கவேண்டுமென்பது தொல்காப்பியத்தானும், புறநானூற்றுச்செய்யுட்களானு மினிதுவிளங்குகின்றது. இவர்களுடைய நாகரீகம் வெகுபுராதனமானதாயிருக்கவேண்டும். தமிழுக்கும், தமிழ்நூல்கட்கும் புராதனமேம்பாடுகூறு மிஷ்டமில்லாத கால்டுவேல்பாதியாரும் "தமிழர்நாகரீகமும், அவர்களது பாஷைமுதிர்ச்சியும் கி. மு. 6, 7 நூற்றாண்டுகட்கு முன்னதாக ஆரம்பித்தேயிருக்கவேண்டு" மென்பாராயின் வேறு என்ன சொல்லக்கிடக்கின்றது.

இனி நமது தமிழ்ப்புராதனநூல்கள் தமிழரது பூர்வீகநாட்டைக் கண்டுகொள்வதற்கு எவ்வளவுதூரம் உபகாரமாகுமென்பதைக் கவனிப்போம். தமிழகத்துக்குப்புறம்பாகத் தமிழர்க்கு ஓர்இடம் இருந்ததாகப் பரம்பரைக்கதையாவது அறிகுறிகளாவது காணப்படவில்லை. ஆரியபூர்வீகர்கட்குப் பனிவரைக்குப்புறம்பாயுள்ள நாடொன்று உண்டென்பது முதலானவற்றைக்காட்டும் இருக்குவேத மந்திரங்களைப்போன்று தமிழர்க் கில்லை. அதுபோன்று தமிழர்களதுபாஷையிலும், நூல்களினும் ஏதாவது தோன்றுமானால் அதனையொட்டி யாராய்ச்சிசெய்வது நன்மையாகும். இதற்கு மாறாக, பழையதமிழ்க்காப்பியங்கள் அந்நியதேசசம்பந்தத்தைக் காட்டாததோடு, நமதுநாட்டிற் காயும் சகிக்கவொண்ணாச் சூரியவெப்பத்தையும் (புறம் 6,43) நிழலைத்தருகின்ற அதியுன்னதமரங்களையும் (கலி 39, 41, 117, ஐங்குறு 189, 219.) காட்டிலலைந்துதிரியும் கொடியமிருகங்களையும் (புறம் 152 கலி 38, 43, 46) அழகிய சிறகுகளையுடையபக்ஷிகளையும் (கலி 37, 108, புறம் 13, 50) பற்றிச் சொல்லுகின்றன.

ஆசியசமதரையிற்காணப்படும் குளிர்ச்சியையும், பனியுறைந்ததுருவநாட்டினியல்பையும், திராக்ஷவளரும் சாலதீயஇராச்சியத்திற் றேற்றமுறுங் காக்ஷியையும்போன்று இங்குக் கிடையா. யானை,

புலிபோன்ற மிருகங்களும் (புறம் 9, 103, 151, 152, கலி 42, 40) மயில், கிளிபோன்ற பறவைகளும் (கலி 37, 108, ஐங்குறு 260, 281, 290, புறம் 13, 50) தினை, வாகுபோன்ற தானியங்களும் (கலி 37, 39, ஐங்குறு 260, 207, 262, 263, 469, புறம் 197, 215, 392, 34, 28.) சந்தனம், வேங்கை, கோங்குபோன்ற மாங்களும் (புறம் 3, 58, கலி 37, 46, 117,) தக்ஷிணத்திற்கேயுரியவைகளன்றி வேற்றுத் தேயங்களிற் காண்டலரிது.

புராதனகிரேக்கம், ஹீப்ரு சிரியா பழையபேபிலோனியாவுங் கூட இந்தியாவின்பெருமையையறிந்து அதன் தேக்கமரங்களையும் சந்தனவிருக்ஷங்களையும் முத்துக்களையும் மஸ்லீன்களையும் வாரிச் சென்றதன்றி மயிற்றோகையையும் மிளகையும் கொண்டுசென்றன. இவைகளெல்லாம் பொதியமலையின்கண் ணுண்டாகியவையென்று, அவை இருக்குமிடத்தையும் பூர்வீகஐரோப்பியவியாபாரிகள் அறிந்திருந்தனர். "கி. மு. 3000 வருடங்கட்குமுன் பேபிலோனியாவை அரசாண்ட ஊரியா என்னும் அரசனால் நிர்மாணிக்கப்பட்ட சாலதீய பட்டினமான ஊரில் இந்தியாவிலுண்டாகுந் தேக்கமரங் காணப்பட்டதென்று" மிஸ்டர் Z. A. ராகோஸின் எழுதுகிறார். இன்னும் தமது "வேதிக்இந்தியா" என்னுங் கிரந்தத்தில் "இந்தத் தேக்கமரமுண்டாவது போதியசாக்ஷியென்றும்,விந்தியத்திற்குத்தெற்கில் மலைநாட்டில் இவையுண்டாகின்றனவேயன்றி வேற்றிடத்தி வில் லை யென் று" மெழுதுகிறார்.

இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கும் பழையகாப்பியங்களெல்லாம் அக்காலத்திலிருந்ததோற்றத்தையும் ஜனங்களையுஞ் செவ்வனே வர்ணித்திருக்கின்றன. புறநானூற்றுப்பாக்களிலொன்றிலேனும், தமிழர்பூர்வதேயம் அயல்நாடென்றாவது, அதிகக்குளிர்பொருந்திய தேசமென்றநோக்கமாவது புலப்படவேயில்லை. தமிழ்த்தேயம், தொன்றுதொட்டு ஐந்திணையாகப் பாகுபாடுசெய்யப்பட்டிருக்கின்றது; அததற்குத்தகுந்த புள் விலங்கு நிலப்பொருள்களும் வெகுஅழகாகவர்ணிக்கப்பட்டிருக்கின்றன. தமிழினது இனிமையும், பெருமையும், ஆரியவிற்பன்னர்களையும், அரசர்களையும் இழுத்தது. அவர்களது பூர்வீகமான சூதுவாதின்மையும், நன்னடக்கையும் ஆரியர்கள் மனதிற்பதிந்து, தமிழ்நாட்டையும், தமிழரையும் கடைச்சங்கநாளிற்

கவனிக்கஆரம்பித்தனர். கடைச்சங்கப்புலவர்களிலொருவரானகபிலர் பிரகதத்தனென்னும் ஆரியவரசனுக்கு (பத்துப்பாட்டினுளொன் ருகிய) குறிஞ்சிப்பாட்டில், இந்நாட்டிலுண்டான புள், விலங்கு, மரம், செடி, பூமுதலியவியற்கைப்பொருள்களை வெகுவிநோதமாக வர்ணித் திருக்கின்றனரென்பது பலருமறிந்ததே. தொல்காப்பியத்தே "வட வேங்கடந் தென்குமரி, யாயிடைத், தமிழ்கூறுநல்லுலகத்து" என்றும், "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில், நாற்பெய ரெல்லை யகத் தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனார் புலவர்" என்றும், (பொருள் 397) சிலப்பதிகாரத்தில் "இமிழ்கடல் வரைப்பில் தமிழக மறிய"வென்றும், பதிற்றுப்பத்தில் "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" என்றுங் கூறியிருக்கின்றனர்.

தமிழர் பிரதமமுதற்கொண்டே தாம் இந்நாட்டினரென்றும், இந்நாடு மேற்கிலும் கிழக்கிலும் சமுத்திரத்தாலும், வடக்கண் வேங் கடமலையாலும், தெற்கின்கட் கடல்வாய்ப்பட்ட பஃறுளி,குமரியாறு களாலுஞ்சூழப்பட்டதென்றுமே சொல்வாராயினர்.

(1) வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் (புறம் ௬)

(2) தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை (புறம் ௧௭)

(3) வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்கம். (சிறுகாக்கைபாடினியம்)

என்றமேற்காட்டியசெய்யுள்களில்ஒன்றற்கொன்று தெற்கட்கெல்லை கூறுமிடத்து மாறுபடக்கண்டாம். தொல்காப்பியப்பாயிரமியற்றிய பனம்பாரனாரும், மேற்காட்டிய புறநானூற்றுச்செய்யுள்கள்பாடிய காரிகிழாரும், குறுங்கோழியூர்கிழாரும் அவர்கள்காலத்துப் பாண்டிய நாட்டிற் குமரியாறுபாய்ந்துவந்ததாகத் தெற்கெல்லைகூறினர்; அவர் கட்குப்பின் இரண்டாஞ்சங்கமழிந்தபின்னர்த்தோன்றிய காக்கைபா டினியார், அவர்காலத்துக் குமரியாறும் குமரிக்கோடுங் கொடுங்கடல்

கொண்டதனோடு தெற்கிலுள்ளநாடுகளு மழிந்து, இருந்தவிடந்தெரி யாமற்போகவே, குமரித்துறையை எல்லையாகக்கொண்டனர்.

எந்தநூலைப்பார்த்தாலும், தமிழ் என்பது அந்நாட்டினருக்கும், அவர்கள் பேசும்பாடைக்கும் பொதுப்பெயராகவேற்படக்காணுகி றோம். தமிழ்என்பதும் அவர்களுடன் றோன்றியதாகவிருக்கின்றதே யன்றி, கிரேக்க, ஆரியரைப்போல் தேன்மொழி, திரவிடமுதலியவை களினின்றும் வந்ததெனக்கொள்ளக் காரணமின்றாம். மிஸ்டர் செல் வக்கேசவராயமுதலியார் M.A., அவர்கள் தமது தமிழ் என்னும் வியா சத்தில், "ஆகவே யிங்கு வடமொழிவாடைவீசுமுன்னரே தமிழ் என்னுங்கிளவி வழக்காறுடையதாகஇருந்தது என்பது போதரும்" என்றும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையவர்கள்"தமிழப்பிள்ளை, தமிழப்பல்லவன், தமிழவண்ணல், தமிழநாகன்எனத் தமிழ்என்னுஞ் சொல் அகரச்சாரியைபெற்றுவருதலும், அஃது ஆரியமொழியல்லாத சுத்தத்தமிழ்ச்சொல்லாதல்பற்றியேயென்றறிக"என்றும் (கலித்தொ கைப்பதிப்புரை) எழுதியுள்ளார்கள்.

தமிழ்நூல்களை நாம் வாசித்தறிந்தமட்டில், தமிழர் வேற்றுத் தேயத்தினின்று இங்குவந்தவர்களல்லரென்றும், பூர்வகுடிகளே யென்றும் விளங்குகிறது. தமிழர் இந்நாட்டிலேயே பிறந்துவளர்ந்து வருவாராயினரேயன்றி வேற்றிடஞ்செல்வாரல்லர். சிலசமயம் அந் நாட்டுவேந்தரிற்பலர் அயற்றேயத்தாரோடுபொருது, அவர்நாட் டைக் கட்டிக்கொண்டு, அங்குத் தம் இராச்சியத்தைத் தாபிப்பாராயி னும், முடிவிற் றங்கள் தேசத்துக்கே திரும்பும்வழக்கமுடையரா யிருந்தனர். இவ்வாறு இவர்கள் அயல்நாடுசென்று மீணெதிரும்ப வில்லையென்பது சாவகம், கடாரம் (பர்மா)முதலியநாடுகளைத் தாங்க ளிழந்த தென்பாண்டிக்கு ஈடுசெய்துகொண்டனரென்பதால் விளங்கும்.

தமிழ்த்தேசச்சேர்டுகில்லாது, அதற்குந்தெற்கிலும் வேறுநாடு களிருந்தனவென்றும், அதைத் தமிழரின்வேறானசாதியினர் ஆண்டு வந்தனரென்றும்,இளம்பூரணத்தானும், பௌதிகதத்துவசாஸ்திரக்ஞர் களாலும் உறுதிப்படுகிறது. ஹெய்க்கல்விற்பன்னர் இந்துமகாசமுத் திரம் ஒருகாலத்திற் பெரியதேசமாயிருந்ததென்றும், அது சந்தாத் தீவுகள்முதல் ஆசியாகண்டஎல்லையோடு மேல்புறம் ஆபிரிக்காவரை

பரவியிருந்ததென்றும், அதுவே மானிடவர்க்கவுற்பத்திஸ்தானமென்றுங் கருதுகின்றனர். மற்றொருவிற்பன்னர் (The Science of Man Australia 1900) பூர்வீகஜனங்களின்பிறப்பிடம் இப்பொழுது சமுத்திரமாயிருக்கும் இந்துமகாசமுத்திரமேயென்று எழுதுகிறார். உலகசரித்திரம் (History of the world) என்பதில்................ "இந்தியாதான் பிரளயத்திற்குப்பிறகு முதன்முதல் ஜனனமானவிடம்" என்றெழுதுகிறார்.

இங்ஙனமாகச் சிலர் இந்தியாவிற்குத்தெற்கே தேசமிருந்ததுண்மையேயாயினும், அது தமிழகத்தோடு பொருந்தியதல்லவென்கின்றனர். அதுகொண்டு தமிழர் வெகுதூரத்திலுள்ள பசிபிக்சமுத்திரக்கரையினின்றும்வந்தவர்களாகவேண்டுமென்கின்றனர். சரித்திரசம்பந்தமான கதையாவது பௌதீகசாஸ்திரவொற்றுமையாவதில்லையென்பதுதான் இதற்குவிடை. இதற்குமாறாக, பூர்வகிரந்தங்களில், தமிழருக்குத் தெற்கே நாடுகளிருந்தனவென்றும், அவர்கள் தங்கள்நாடு வெள்ளத்திற்கிரையானபோது வடக்குநோக்கிச்சென்று தங்கினரென்றும் காணப்படுகின்றது. தமிழ்த்தேயத்திற்குந் தெற்கிலிருந்த தமிழரின்வேறானசாதியினர், வடபாற்செல்வதற்குவழியின்மையான் அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பாபோன்ற பிறநாடுகளிற் சென்றுவாழ்ந்தனர் என்பது ஒருவாறுபொருந்தக்கூடும்.

டாக்டர் C. மாக்ளீன் என்பவர் தமது சென்னைஇராஜதானி அட்மினிஸ்டிரேஷன் மான்யூவலில் பௌதிகசாத்திரமும், தாதுப்பொருள்களின்சரிதையும் மானிடவறிவுக்குட்பட்ட ஒருகாலத்தில் தென்னிந்தியா ஆசியாவோடுசேர்ந்த வொருநாடல்லவென்று, நிச்சயமாய்க்காட்டுகின்றன என்று எழுதியிருக்கிறார். தெக்ஷிணதேசம் பெரியதாக இருந்திருக்கவேண்டுமென்று, இங்குக்காணப்படுகிறது. ஸம்ஸ்கிருதபுராணங்களும், இலங்காத்வீபபுத்தர்களும், மேல்கரைப் புராதனக்கதைகளும் இப்படி ஒருபிறழ்ச்சியுண்டாயிற்றென்பதை வற்புறுத்தும். ஜனங்களைப்பற்றி விசாரிக்கப்புகின், வடதேசங்களில் இப்பொழுதுகாணப்படும் ஜனங்களெல்லாம், இத்தென்னிந்தியாவழியாகத் தெற்கினின்றும் சென்றவர்களென்பதைக் குறிப்பிட வேண்டியஆதாரங்கள் கிடைக்கின்றன. மற்றவிடங்களைப்போல இவ்

விடங்களிலும் புராதனமாகச் சனங்கள்வசித்துவந்தனரென்பதற்கறி குறியாகப் பூர்வசனங்கள், வேலைசெய்யாதகற்களையும், வேலைசெய்த கற்களாலான ஆயுதங்களையும், ஆரம்பத்திற்செய்யக்கூடிய திருத்த மற்ற உலோகப்பொருள்களையும் உபயோகித்ததாகச் சின்னங்களிருக் கின்றன. இச்சாதியினர் சமாதிஸ்தானங்களைக்குறிப்பிட முதுமக் கட்டாழிகளையும் (Cairns) கருங்கற்களாலாகியவட்டங்களையும் அமைத்திருப்பதைக் காண்கிறோம். இவைகளைத் திராவிடருக்கு முந்தியென்றுகூறுவது வழக்கம். மலைநாட்டுக்குறும்பரும் இதுபோ லச் சமாதிகட்டுகின்றனர். அவர்கள் புராதனக்குடிகளுள் ஒருபாகத் தினரென்கின்றனர். திருநெல்வேலிப்பக்கத்திலும் முதுமக்கட்டாழிக ளகப்படுகின்றன. அவைகளும் புராதனமானவை.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால் இந்தத்தமிழருக்குக்கூட அந் நியதேசபூர்வம் கொடுத்த மேனாட்டுப் பண்டிதசிகாமணிகளின் உன் னதஆவல் ஒருபுறமிருக்க, சந்தேகாஸ்பதமேகிடையாத தமிழ்ப்பண் டைநூல்களில் இப்படிப்பட்ட மூடச்செய்தியை யொப்புக்கொள்ளக் கூடிய வெழுத்து ஒன்றுமில்லையென்பதும், முன்னேற்றமடைந்து வரும் பூதத்துவபரிசோதனைகள் தமிழரது புராதனநாடு பனி நிறைந்த ஹிமோத்கிரிக்குமேலென்றுவது,(1) வானவர்நாட்டிலென் றுவது,(2) இபிரேயர்கள் நாடுவிட்டகல்வதற்குமுன் அந்நாட்டினென் றுவது, (3) குறிக்காது, கடல்கோட்பட்ட இந்தியப்பகுதியென்று பறையடிக்கிறதென்பதும் இந்துமகாசமுத்திரமான பெருந்தேவி அநேககற்பங்கள்சென்றும் தானுண்ட அரதனம்போன்ற பூர்வ வஸ்துக்களை வெளிவிடப்பிரியப்படாது கொண்டிருக்கிற ஒருபகுதி யினையும் எஞ்சியபகுதியினையுஞ் சேர்த்துக்காணப்படும் தக்ஷிணபாக மே, மிகப்பழைய தமிழ்நாடும் தமிழகமும் என்பதுமே துணிந்த பொருள்களாம்.

———:O:———

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

(1) சித்தியூன்கொள்கை (கால்டுவேல்)

(2) கனகசபைப்பிள்ளையவர்களதுகொள்கை.

(3) டாக்டர் போப்பின்கொள்கை.

சாணக்கியநீதிவெண்பா*

(௪௦௪)

(௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஶ்லோகம்.

பரோக்ஷே கார்யஹந்தாரம் ப்ரத்யக்ஷே ப்ரியவாதிநம் ।
வர்ஜயேத் தாத்ருஶம் மித்ரம் விஷகும்பம் பயோமுகம் ॥

வெண்பா.

முன்னிலையி னின்சொன் மொழிந்து புறத்தேகி
நன்னிலைசேர் காரியங்க ணன்கழிக்க—உன்னுகின்ற
மித்திரனைப் பான்மிசையும் வெய்ய விடங்கீழும்
உய்த்தகுடமென்றே யொழி.

ஶ்லோகம்.

ஸக்ருத் துஷ்டம் ச மித்ரம் ய: புந: ஸந்தாதுமிச்சதி ।
ஸ ம்ருத்யுமுபக்ருஹ்ணாதி கர்பமஶ்வதரீ யதா ॥

வெண்பா.

முன்னொரு தீங்கு முறைகடந்து செய்தவனைப்
பின்னரு நட்பாக்கும் பேதைசெயல்—என்னையோ
நாடி யவன்செய்யு நாசந் தனைத்தனக்குத்
தேடுகின்றான் றானே தெரிந்து.

ஶ்லோகம்.

நவிஶ்வஸே அவிஶ்வஸ்தே மித்ரே சாபி நவிஶ்வஸேத் ।
கதாசித் குபிதம் மித்ரம் ஸர்வதோஷம் ப்ரகாஶயேத் ॥

---

*முன்னர்ப்பத்திரங்களில் வேருயினும் இப்போது சாணக்கியநீதிவெண்பா என்று பெயர் திருத்தப்பட்டது. புத்தகமாகுங்கால் இன்னுந் திருத்தம் பெறும்.

வெண்பா.

நம்புங் குணமிலியை நட்பாள னென்றெண்ணி
நம்பற்க வெங்கோப நண்ணுமேல்—நம்பினவன்
சொல்லா னெனமறைவிற் சூழ்ந்து புரிந்தபிழை
யெல்லாம் வெளியாக்கு மீண்டு.

ஶ்லோகம்.

ஜாநீயாத் ப்ரேஷணே ப்ருத்யாந் பாந்தவாந் வ்யஸநாகமே ।
மித்ரஞ்சாபதி காலே ச பார்யாஞ்ச விபவக்ஷயே ॥

வெண்பா.

ஏவற் றொழிலினனை யேவ விடத்தறிக
ஆபத்தின் மித்திரனை யாய்ந்தறிக—மேவுமனைப்
பைந்தொடியை நல்குரவின் பாலறிக தன்கிளையை
வெந்துயரின் பாலறிக மீட்டு.

ஶ்லோகம்.

உபகாரக்ருஹீதேந ஶத்ருணா ஶத்ருமுத்தரேத் ।
பாதலக்நம் கரஸ்தேந கண்டகேநைவ கண்டகம் ॥

வெண்பா.

கைத்தலத்து முட்கொண்டு காலினடி மருவித்
தைத்தகடு முட்களையுந் தன்மைபோற்—சத்துருவின்
சத்துருவா லங்கவனைத் தான்களைந்து வேரறுக்கல்
உத்தமமா மென்றுரைத்தா ரோர்ந்து.

ஶ்லோகம்.

ந கஶ்சித் கஸ்யசிந்மித்ரம் ந கஶ்சித் கஸ்யசித்ரிபுஃ ।
காரணேந ஹி ஜாயந்தே மித்ராணி ரிபவஸ்ததா ॥

வெண்பா.

மண்ணி லொருவருக்கு மற்றொருவர் வெம்பகையும்
நண்ணுறவு மாகி நடந்திடுதல்—எண்ணினில்லை
நேரும் பகையு நிகழுறவு மொவ்வொன்றே
காரணமாய் வந்தடையுங் காண்.

ஶ்லோகம்.

துர்ஜந: ப்ரியவாதீ ச நைதத் விஶ்வாஸகாரணம் ।
மது திஷ்டதி ஜிஹ்வாக்ரே ஹ்ருதயே து ஹலாஹலம் ॥

வெண்பா.

நாக்கு நுனிக்க ணறுந்தேனு நெஞ்சகத்து
நீக்கரிய நஞ்சு நிலைபெற்ற—தீக்குணத்தோன்
இன்சொ லுரைக்கின்று னென்றவனை நம்பாதே
என்சொலினுஞ் செய்வா னிடர்.

ஶ்லோகம்.

ஸர்ப: க்ரூர: கல: க்ரூர: ஸர்பாத் க்ரூரதர: கல: ।
† மந்த்ரௌஷதிவஶ: ஸர்ப: கல: கேந நிவார்யதே ॥

வெண்பா.

சீறரவு மூர்க்கனுந் தீங்குபுரி வாரெனினுஞ்
சீறரவின் மூர்க்கனே தீயவன்காண்—சீறரவம்
மந்திரத்தாற் கைவசமா மூர்க்கன் வசமாதல்
எந்தவிதத் தானு மிலை.

---

† மந்த்ரௌஷதி என்புழி ஔஷதி என்பது ஈண்டு மொழிபெயர்த்து அமைக்கப்படவில்லை. இதுபோல இன்னுஞ் சிலவுள.

ஶ்லோகம்.

𑌨𑌖𑌿𑌨𑌾𑌂 𑌚 𑌨𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌶𑍃𑌙𑍍𑌗𑌿𑌣𑌾𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍋 𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌰𑌾𑌜𑌕𑍁𑌲𑍇𑌷𑍁 𑌚 ॥

வெண்பா.

கூர்ந்த நகவிலங்கு கொம்புடைய மாடுபடை
சேர்ந்த கரத்தர் தெரிவையர்கள்—வேந்தர்குலம்
ஓடுநதி யென்றிவைக ளொன்றுசெயு நம்பாதே
கூடுங்கா லாராய்ந்து கொள்.

ஶ்லோகம்.

𑌹𑌸𑍍𑌤𑍀 𑌹𑌸𑍍𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣 𑌶𑌤𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑌾𑌜𑌿𑌨𑌃 ।
𑌶𑍃𑌙𑍍𑌗𑌿𑌣𑍋 𑌦𑌶𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌸𑍍𑌥𑌾𑌨𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌃 ॥

வெண்பா.

ஆனைக்கு நீங்குமுழ மாயிரமே கொம்புடைய
ஏனை விலங்குகளுக் கீரைந்தே—வானிமிரும்
வாசிக் கொருநூறே துர்ச்சனற்கு வைகுமிடம்
ஆசறவிட் டேக லழகு.

ஶ்லோகம்.

𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍇𑌕𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌜𑌨𑌪𑌦𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥

வெண்பா.

உற்றகுலங் காத்தற் கொருபொருளைக் கைவிடலாம்
குற்றமிலூர் காக்கக் குலம்விடலாம்—மற்றொருநா
டுய்யும் படிவிரும்பி யூர்விடலாந் தன்னுயிர்க்கு
வையகமுங் கைவிடலா மற்று.

ஶ்லோகம்.

ஆஜ்ஞஶிஷ்யேண ம்ருதுஹ்ருதயாஸ க்ருத்தம் அஞ்ஜலிகர்மணா ।
மூர்க்கம் ச்சந்தானுவ்ருத்தேன யாதாதத்யேன பண்டிதம் ॥

வெண்பா.

பண்டிதனை யுண்மை பகர்ந்தும் பெருங்கோபங்
கொண்டவனைக் கைகுவித்துக் கும்பிட்டும்—மிண்டுகுண
மூர்க்கனைப் பின்சென்று முற்றுந் தனதுவசம்
ஆக்கலா மீதருமை யன்று.

ஶ்லோகம்.

அர்த்தநாஶம் மநஸ்தாபம் க்ருஹே துஶ்சரிதாநி ச ।
வஞ்சநஞ்சாபமாநஞ்ச மதிமாந்ந ப்ரகாஶயேத் ॥

வெண்பா.

நிந்தை பொருட்கேடு நெஞ்சத் துயர்பிறரால்
வந்து தனையடைந்த வஞ்சிப்பு—புந்திமான்
இல்லத் திழிந்தசெய லென்னு மிவையயலிற்
செல்ல வெளிப்படுத்த றீது.

ஶ்லோகம்.

மநஸா சிந்திதம் கார்யம் வசஸா ந ப்ரகாஶயேத் ।
அந்யலக்ஷித கார்யஸ்ய யத: ஸித்திர் ந ஜாயதே ॥

வெண்பா.

செவ்வைபெற நெஞ்சகத்திற் சிந்தித்த காரியத்தை
எவ்வெவர்க்குஞ் சொல்லா தியம்பற்க—இவ்வுலகிற்
பல்லோ ரறியிற் பழுதாம் பயன்படலும்
இல்லையெனச் சொன்னா ரெடுத்து.

ஶ்லோகம்.

𑌋𑌣𑌶𑍇𑌷𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌶𑍇𑌷𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑍇𑌷𑌂 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍॥

வெண்பா.

வட்டிக் கடனும் வளர்நெருப்பும் வெம்பிணியுங்
கட்டழித்தல் வேண்டுங் களைந்துகுறை—விட்டதுண்டேல்
சும்மா விடுமோ தொடர்ந்து முழுதழிக்கும்
அம்மா தடுத்த லரிது.

ஶ்லோகம்.

𑌕𑍋𑌕𑌿𑌲𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌨𑌾𑌰𑍀𑌰𑍂𑌪𑌂 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑍂𑌪𑌂 𑌕𑍁𑌰𑍂𑌪𑌾𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍂𑌪𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂॥

வெண்பா.

தாங்குருவங் கெட்டார்க்குத் தக்ககல்வி யேயழகு
மாங்குயிலுக் கின்னிசையே மன்னழகு—தீங்ககன்ற
ஞானமுனி வோர்க்கழகு நற்பொறையே மிக்கவலி
ஆனகற்பே பெண்கட் கழகு.

ஶ்லோகம்.

𑌗𑍁𑌰𑍁𑌰𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃।
𑌪𑌤𑌿𑌰𑍇𑌕𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌗𑌤𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃॥

வெண்பா.

வேதியருக் கக்கினியே மிக்ககுரு வேதியர்கள்
ஆதியர்க்கு வேதியனே யான்றகுரு—மாதருக்குக்
கொண்டவனே வாய்த்த குருவிருந்தாய் வந்தடைந்து
கொண்டவனே யாண்டுங் குரு.

(வரும்.)

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சுன்னுகம்.

செல்வநூல்.

Economy.

———o———

அத்யாயம் I.

1. செல்வத்தின் தன்மையையும், அதன் விருத்தி, பரிவர்த்தனை, விபாகம் என்பவைகளின்விதிகளையும் விவரமாய்க்கூறும் சாஸ்திரமே செல்வநூல்எனப்படும்.

2. செல்வம். (Wealth) மனிதர்கள் பரஸ்பரம் பரிவர்த்தனை (exchange) செய்துகொள்ளத்தக்க மதிப்புள்ள வஸ்துக்கள்யாவும் செல்வமாகும். ஆடு, மாடு, வீடு, நிலம்முதலானயாவும் செல்வமே. ஒருவனிடம் ஒருமாடும், மற்றவனிடம் 4 ஆடுகளும் இருந்து, ஒரு மாட்டுக்கு 4 ஆட்டைப் பரிவர்த்திக்கமுடியுமானால், ஆடும், மாடும் செல்வமெனப்படும். அப்படிக்கல்லாது சுலபமாய் அகப்படக்கூடிய காற்றும், நீரும் செல்வமாகமாட்டா. ஆயினும், நீரில்லாவிடத்தில், ஒருவன் ப்ரயாஸைப்பட்டு ஜலம்கொண்டுவந்துவிற்பானாகில், அவ்விடம்சம்பந்தப்பட்டமட்டில், ஜலமும் செல்வமாய்விடும்.

3. செல்வமும் பணமும். பணமென்பது செல்வத்தின் ஒருவித அங்கமேயொழிய அதுவே செல்வமாகமாட்டாது. ஸஹாரா என்னும் பாலைவனத்தில், தனிமையாய்த் தவிக்கும் கோடீசுவரனுடைய கோடிதிரவியமும், மதிப்பில்லாததால், செல்வமாகமாட்டாது. அதைக்கொண்டு, அதன் ஸ்வான்தார் தனக்குவேண்டியபண்டங்களை வாங்கிக்கொள்ளக்கூடுமானால்தான் அந்தப்பணம் செல்வமாகும்.

4. பணம். (Money) ஆதலால், பண்டமாற்றலுக்குச் சாதகமானமதிப்புள்ளதே பணம் எனப்படும். பணம் என்பது பொன், வெள்ளி, அல்லது செம்பாகத்தானிருக்கவேண்டுமென்பதில்லை. உலகத்தார், அல்லது ஒருதேசத்தார், தங்கள்செல்வத்தை அளவிட, ஒரு பொதுஅளவாய், ஸங்கேதத்தின்பேரில் ஏற்படுத்திக்கொள்வதெல்லாம் பணம் ஆகும். கிஸ்ரவணி (Currency) நோட்டுக்கள், அச்சடிக்கப்பட்டிருக்கும் கடிதங்கள் தம்படிவிலைகூடப்பெறுவாயினும், அவைகளில் ஸங்கேதத்தாலும், ராஜாங்கஜாமீன்பேரிலும் அடிக்கப்பட்டிருக்கும் தொகையே, அந்நோட்டுகளின் மதிப்பாகின்றதல்லவா.

5. பணம் பண்டமாற்றலுக்குச்சாதகம். (Money as medium of exchange) திருநெல்வேலியிலுள்ள ஆட்டுக்காரன், தஞ்சாவூரில் மாடுவாங்கவிரும்புகிறான். ஒரு ஆட்டின்மதிப்பு 10 ரூ என்றும், மாட்டின்மதிப்பு 40 ரூ என்றும் வைத்துக்கொள்வோம். ஆட்டிடையன் தன் 4 ஆடுகளையும் தஞ்சாவூருக்குக்கொண்டுபோய் மாடு மாற்றுவதைப்பார்க்கிலும், திருநெல்வேலியிலேயே 4 ஆடுகளையும் 40 ரூபாய்க்குவிற்று, அந்தப்பணத்தைக்கொண்டு தஞ்சாவூர்சென்று, மாடுவாங்கிவருவானாகில், ஆட்டைத் தஞ்சைக்குக்கொண்டுசெல்லும், செலவும், ப்ரயாஸையும் அவனுக்கு லாபமல்லவா? தவிரவும், மாடு விற்பவனுக்கு ஆடு தேவையில்லாமலுமிருக்கலாம். ஆகையால், இவ்வளவுசௌகரியத்துக்கும் காரணம், திருநெல்வேலிக்காரரும், தஞ்சாவூர்க்காரரும் ரூபாயைப் பொது அளவாய் வழங்கிவருதல்தான். இப்பணம், பவுன், ரூபாய், துட்டு அல்லது நோட்டு முதலான எவ்விதரூபமாயுமிருக்கலாம்.

ORIENTAL MANUSCRIPTS LIBRARY

அத்யாயம் 2.

செல்வவிருத்தி.

(Production of Wealth)

6. செல்வவிருத்திக்கு அவசியமானவை மூன்று பொதனங்கள். அவை நிலம், வேலை, முதல் எனப்படும்.

நிலம்.

(Land)

7. நிலம். செல்வவிருத்திக்கு முதலாவதுஸாதனம் நிலம். நாம் உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் நிலத்தின்பலனே. கம்பளி யுடையானாலும், கம்பளிக்கு ஆதாரமானமிருகங்கள் பூமியிலுள்ள புல் பூண்டுகளைத்தின்று ஜீவிக்கின்றன. கைத்தொழிற்சரக்குகள்யாவும் பூமியினின்றுண்டாகும் ஜீவராசிகள், தாவராசிகள், தாதுவர்க்கங்களினின்றுந்தான் உண்டாகின்றன.

வேலை.

(Labour)

8. பூமியைமாத்திரம் செல்வவிருத்திக்குக் காரணமென்று சொல்லலாகாது. பூமியிற் பயிர்செய்யவும், சுரங்கங்கள்வெட்டவும், வேலையாட்களும், அதற்குப் பலவகை உபகரணங்களும்வேண்டும். நாகரீகஜாதியார்குடியேறுமுன் அமேரிக்காதேசத்தின், மிஸிஸிபிநதிதீரப்ரதேசங்கள் எவ்வாறு இருந்தன? கங்கைவளநாடாயினும், அதைப் பண்படுத்திப் பயிரிடும் கூலியாட்கள் இல்லையாயின் அதன் பயனென்ன? ஆதலால், செல்வவிருத்திக்கு வேலை என்பது இரண்டாவதுசாதகம் ஆகும்.

9. வேலை இருவகைப்படும். பயனற்றவேலை, பயனுள்ள வேலை என. செல்வவிருத்திக்குச்சாதகமல்லாதவை பயனற்றவேலை. (Unproductive labour) பாட்டுப்பாடல், நாடகம், ஜாலவித்தை, இவைகளெல்லாம் ஒருவன்பணம் மற்றவனுக்குச்செல்லுகிறதென்பதுமாத்திரமேயொழிய பொதுச்செல்வவிருத்திக்குச் சாதகமன்று. அப்படிக்கல்லாது கப்பல்செய்தல், வீடுகட்டல், யந்திரநிர்மாணம் முதலானவைகள், செய்பவர்களுக்குச் செல்வமுண்டாக்குவதுடன், செய்விப்போருக்கும் பயன்தருவனவாயிருக்கின்றன. இவைகள் தான் பயனுள்ளவேலை (Productive Labour) எனப்படும்.

10. யூகவேலையும் முரட்டுவேலையும். (Skilled and Unskilled Labours) நதியில் பாலம்கட்ட நாள்தோறும் ஆள் ஒன்றுக்கு அரை ரூபாயும் ஒரு ரூபாயும்பெற்று ஆயிரக்கணக்கானகூலிகள் வேலைசெய்கிறார்கள். அப்பாலநிர்மாணத்தை மேற்பார்க்கும் இஞ்சினீயரோ மாதம் 2000 அல்லது 2500 ரூ சம்பளம்வாங்குகின்றான். சம்பளவிகிதத்தில் இவ்வளவு வித்யாஸத்துக்குக்காரணமென்ன? புத்தியை ப்ரயோகித்து, அந்நதிவேகத்தின் பலாபலங்களையும், தரையின் அமைப்பையும் கணக்கிட்டு, அதற்குத்தக்க பாலத்தை ஊஹித்துத் தகுந்தசாமான்களைக்கொண்டு பாலத்தை நிர்மிக்கும் புத்தித்திறமையுள்ள இஞ்சினீயர் ஒருவன் இல்லையாயின், ஆயிரக்கணக்காய் முரட்டு வேலைசெய்யும் கூலிகளின், உழைப்பெல்லாம் பயனற்றதாய்முடியும். அதுவரை யூகமில்லாமற் கட்டினவைகளெல்லாம், ஒரேவெள்ளம்

அடித்துக்கொண்டுபோய்விடும். ஆகையால் ஒரு இஞ்சினீயரின், புத்தித்திறமை, ஆயிரக்கணக்கான கூலிகளின் தேகச்ரமத்துக்கும் பன்மடங்கு அதிகமானது. ஆதலால், இஞ்சினீயரின்வேலை யூகவேலை யென்றும், மற்றவர்கள்வேலை முரட்டுவேலையென்றும் பெயர்பெறும்.

அத்தியாயம் 3.

வேலைவிபாகம்.

(Division of Labour)

11. ஒருவீடுகட்டுவதில் மண்வெட்டுவேலை, மரவேலை, கொல்வேலை, கொத்துவேலை முதலான பலவிதவேலைகளை ஒருவனேசெய்வதைப்பார்க்கிலும், அவ்வத்தொழில் தெரிந்த பலர்செய்வதேநலம். இதற்குத்தான் வேலைவிபாகம் (Division of Labour) என்று பெயர். இதன்சாதகங்களை ஆடம்ஸ்மித் என்பவர் மூன்றாகக்கூறுகின்றார். (1) தொழிலாளி தன்தன் தொழிலில் மிகத்தேர்ச்சியடைகின்றான். (2) தொழில்விட்டுத் தொழில்மாறாது தன் தொழிலையேசெய்வதாற் காலச்சுருக்கம் ஏற்படுகின்றது. (3) ஒவ்வொருவனும் தன் தன் தொழிலேசெய்வதில் மனதைச்செலுத்துவானாகில், தக்கயந்திரங்களைக் கற்பித்துக்கொள்ளவும் சாதகமாகும்.

1-வது சாதகம். (advantage) உதாரணம்:—எழுதுகோல் செய்யும் தொழிற்சாலையிற்பார்த்தால், அதில் அமர்ந்திருக்கும் கூலிகளின் கைலாகவம் அதிஅற்புதமாய் இருக்கும். அதற்குக்காரணம், அவர்கள் ஒரேதொழிலில், மனத்தையும் புத்தியையும் செலுத்தி அப்யஸிப்பதால் அவ்வளவுஸாதகம் ஏற்பட்டுவிடுகின்றது. அப்படிக்கல்லாது அவர்களைப் பலவேலைசெய்யச்சொன்னால், ஒருவேலையிலாவது அவ்வளவு உயர்ந்தபயிற்சியடையமாட்டார்கள்.

2-வது சாதகம் காலச்சுருக்கம். ஸ்டேஷனில் புகைவண்டிவந்து நின்றதும், ஒருவன் வண்டித்தொடர்மீது ஏறி, ஒவ்வொருவண்டி மேலுமுள்ள லாந்தல்களைஎடுத்து, பக்கத்திற் கீழேநிற்பவனிடம் கொடுக்கின்றான். அவன், மற்றவனிடம்கொடுக்க, இவ்வாறு 4, 5 நிமிஷநேரத்தில், 40, 50 வண்டிகளிலுள்ள லாந்தல்கள்முழுமையும்,

லாந்தல் அறைக்குப் போய்ச்சேருகின்றன. அப்படிக்கல்லாது, ஒருவனே வண்டியிலிருந்து லாந்தலையெடுத்து, இறங்கி ஸ்டேஷன் அறையில் வைத்துவரவேண்டுமானால், அரைமணிநேரத்திற்கூட அவ்வளவு வேலையும் முடியாது. அதனால் காலதாமதம் ஆகின்றது. 5 நிமிஷத்தில் ஆகக்கூடியதை அரைமணிநேரமாக்குவது எவ்வளவு பேதைமை?

3-வது சாதகம். பலவிதயந்திரம் கண்டுபிடிக்கச் சாதகமாகும். முதன்முதல் நெருப்புயந்திரம் (Fire Engine) கண்டுபிடிக்கப்பட்ட பொழுது அதிலுள்ள ஒருமூடியை (Valve) மூடவும் திறக்கவும் ஒருபையன் அமர்ந்திருந்தான். அம்மூடி தானாகவே திறக்கவும் அடைக்கவும் ஒருவிசைகண்டுபிடித்துவிட்டால், தான் விளையாடப் போகலாமென்று யோசித்தான். இதனால் அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. உடனே அவன் அந்தமூடிக்கும், யந்திரத்தின் மற்றொருபாகத்துக்கும் ஒருகயிற்றைக்கட்டிவிட்டான். உடனே அம்மூடி பையனுடைய உதவியில்லாமலே தானாகவே திறக்கவும், அடைக்கவும் துவங்கிவிட்டது.

4-வது சாதகம். மேற்கூறியவைகளைத்தவிர நான்காவது சாதகமும் ஒன்றுண்டு. ஒவ்வொருவனும், அவனவன் அதிகத்தேர்ச்சியடைந்த வேலையிலேயே அமர்ந்துகொள்ளலாம். நாளொன்றுக்கு 10 ரூபாய் வேலைசெய்யும் சிற்பி ஒருவனிருக்கின்றான். அவனிடம், பலகைகளை அளவுப்படி அடித்துச் செப்பனிட்டுக்கொடுத்துவிட்டால் அதில் அவன் சிற்பவேலைசெய்வான். அப்படிக்கல்லாது, பலகை சதுரிக்கும் வேலையையும் அவனேசெய்வதென்றால், 10 ரூபாய் சம்பாதித்துக்கொடுக்கும், அவன் சிற்பஞானமானது, அரைரூபாய்க் கூலியால்முடியும் அவ்வற்பவேலையில் வீணாகிவிடுகின்றது. அதனால் அவனுக்கு 9½ ரூ நஷ்டமல்லவா?

சிலபாதகங்கள். (Disadvantages) இதிற் சிலபாதகங்களும் உண்டு. நாற்காலிக்கால்கள் மாத்திரம்செய்பவன் ஒருவன், கைகள் செய்பவன் ஒருவன், எல்லாவற்றையும்சேர்த்துச் செப்பனிடுபவன் ஒருவனாயிருந்தால், அந்நாற்காலியில் ஏற்படும் குற்றங்குறைகளுக்கு ஒருவனும் பொறுப்பில்லாதவனாய்விடுகிறான். ஒருவன் மற்றவன் மேற் பழியைப்போட்டுவிட்டு, கடைசியில், வேலையைக்கெடுத்துவிடுகின்றார்கள்.

12. ஸ்வேச்சாவியாபாரமும் வேலைவிபாகமும். ஸ்வேச்சா வியாபாரம்(Free trade) வேலைப்பயிர்ச்சிக்கு மிக்க உபயோகமானது. ஒவ்வொருதேசமும், தனக்குவேண்டிய சாக்குகளைக் கஷ்டப்பட்டாவது தன் தேசத்திலேயே செய்துகொள்வதைவிட, தன்தேசத்திற் சுலபமாய்ச்செய்யும் சரக்குகளைக்கொண்டு அன்யதேசத்திற் சுலபமாயும் சரசமாயும் கிடைக்கக்கூடிய சரக்குகளைவாங்கிக்கொள்வது இருதேசத்துக்கும் நன்மையல்லவா? இங்கிலாந்தில் நிலக்கரி அதிகம். பருத்தி விளைவில்லை. இந்தியாவிற் பருத்தியதிகம். நிலக்கரி யில்லை என்று வைத்துக்கொள்ளுவோம். இங்கிலாந்துதேசத்தார் தங்களுக்குவேண்டிய பருத்திகளைக் கஷ்டப்பட்டாவது, பொதி ஒன்றுக்கு 100 ரூபாய்ச்செலவின்பேரிற் பயிர்செய்துகொள்வதைப்பார்க்கிலும் தங்கள் நிலக்கரியைக்கொடுத்து; பொதி ஒன்றுக்கு 50ரூ வீதம் இந்தியாவில் வாங்கிக்கொள்ளுவது நலமல்லவா? இவ்வாறுசெய்வதற்கு, வியாபாரிகள் தங்கள் இஷ்டப்படி எந்தத்தேசத்திலும் வியாபாரம் செய்யவும் பண்டமாற்றவும், யாதொரு தடையுமில்லாமல் இருக்கவேண்டும். அப்படிக்கில்லாது இந்தியாவிலுள்ள பருத்தி இங்கிலாந்துக்குத் தாராளமாய் வராமல் ராஜாங்கத்தார் கடற்சுங்கம் போட்டால் அது இருதேசத்துக்கும் கெடுதி. வியாபாரமும் கைத்தொழிலும் முறிந்துவிடும் அநேக தொழிற்சாலைகள் வேலைக்குச் சரக்கில்லாமல் அடைத்துவிடவேண்டியதாய்வரும்.

13. கூட்டுவேலை. (Co-operation of Labour) சிலவேலைகள் பலர்சேர்ந்துதான் செய்யக்கூடியதாயிருக்கும். ஒருவனே செய்ய முயன்றால், அவன் உழைப்பு வீணாய்விடும். சமுத்திரத்திற் கிடக்கும் ஒரு படகைப் பலர்கூடிஇழுத்தாற் கரைவந்துசேரும். அப்படிக்கல்லாது ஒருவனே இன்றைக்குக்கொஞ்சம் நாளைக்குக்கொஞ்சம் இழுக்கிறேன் என்றால் முடியக்கூடியதா?

14. கூட்டுவேலை இருவகைப்படும்:—ஒற்றைவேலை (Simple Co-operation) கலப்புவேலை என. (Complex Co-operation) ஒரு பெரும்பாரத்தைத்தூக்குவதிற் பலர்சேர்வது ஒற்றைக்கூட்டுவேலை எனப்படும். துணிநெய்வதில், பருத்திபயிரிடுபவர்சிலர். அதைப் பிறக்கிக்கட்டுபவர்சிலர். அதைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டுபோவார்சிலர். அதை அறைப்பவர்சிலர், ஏற்றுமதி இறக்குமதி

செய்பவர்சிலர். நூற்பது ஒருதொழில். பாவோடுவது ஒருதொழில். நெசவு ஒருதொழில். அதை மடிப்பது ஒருதொழில். அவற்றை மூட்டைகளாய்க்கட்டுவது ஒருதொழில். ஆகப் பலர் பலவிதமாய்ப் பிரிந்து, தங்கள் தங்கள்வேலைகளைச்செய்வதால், நெசவுவேலை பூர்த்தியாகின்றது. இதற்குத்தான் கலப்புவேலை (Complex Co-operation) என்றுபெயர்.

15. ஆயுதங்களும், யந்திரங்களும். வேலைவிபாகமும், கூட்டுவேலையும் வேலைப்பயிர்ச்சிக்கு இரண்டு முக்யசாதகங்கள் என்று சொல்லப்பட்டன. இவையன்றி, ஆயுதங்களும், யந்திரங்களும் அதற்கு மூன்றுவது உபகரணங்களாகின்றன. எவ்வளவுசமர்த்தனுயினும், மண்வெட்டியில்லாமற் பயிரிடமுடியாது. ஊசியில்லாமல் தைக்கவும்முடியாது. தற்காலத்தில் நாளுக்குநாள் யந்தரஸாதனங்கள் விருத்தியடைந்துவருகின்றன. யந்திரஸஹாயமும் இருவகைப்படும். கூலியாட்களின் தனிவேலை (Individual Labour)யை யந்திரமூலமாய்ச்செய்வது ஒருவகை. தையல்யந்திரம், அரிசியந்திரம் முதலானவை இவ்வகுப்பைச்சேர்ந்தன. மனிதனுல் ஆகக்கூடாததை யந்திரசகாயத்தால் முடித்துக்கொள்வது மற்றொருவகை. எத்தனை பேர்கூடியும் அசைக்கமுடியாப்பாரத்தை, ஒரு ரெயில்இஞ்சின், மணி ஒன்றுக்கு 40 மைல்வீதம் இழுக்கின்றதல்லவா?

16. வேலைப்பயனும், மற்ற அவசியங்களும். முன்கூறிய மூன்று வகைச்சாதகங்கள் தவிர, வேலையின் முழுப்பயனும் அடைய இன்னும் அவசியமானவைகள் சில இருக்கின்றன. அவை, சாமர்த்தியம், புத்திதிறமை, யோக்யதை, நம்பிக்கை முதலானவைகளே. வேலையாளிடம் இக்குணங்கள் இல்லாவிடில் அவன்செய்யும்வேலை முழுப் பயனடையமாட்டாது.

சாமர்த்தியமும், கைத்தொழிலுக்குவேண்டிய லாகவமும், பயிர்ச்சியு மில்லாதவன்வேலை சரியாயிராது. அப்பயிற்சி போதனு முறையாலும் அப்யாஸத்தாலும் நாளடைவில்தான் வரவேண்டும்.

புத்தித்திறம். தன்புத்தியில்லாதவேலைக்காரன், சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை யென்றபடி தான்கற்றதைமாத்திரம் யந்திரப்பாவைபோலச் செய்துகொண்டிருப்பான். அத்தொழிலை மேன் மேலும் அபிவிருத்திசெய்ய அவனுல் முடியாது. ஏதாவது அதில்

ஒருகுற்றம் எதிர்பாராது நேர்ந்துவிட்டால் அதைத் தானகவே சரிப்படுத்திக்கொள்ளமுடியாமல், தன்குருவையாவது, அதையறிந்த மற்றெவனையாவது யுக்திகேட்கப்போவான். அதனால் அவன் கைவேலை தவக்கப்பட்டுவிடும்.

யோக்யதை. வேலையாட்கள் யோக்யனகவும் இருக்கவேண்டும். யோக்யதையில்லாதவனுக்கு வேலைகிடைக்கமாட்டாது. குடிகாரன் சரியானபடிவேலைசெய்யாது; சரீரத்தையும், புத்தியையும் கெடுத்துக் கொண்டு நாளடைவில், தன்வேலைத்திறத்தையு மிழந்துவிடுவான்.

நம்பிக்கை. (Trust worthiness) நம்பிக்கையில்லாத வேலைக்காரனை ஒருவரும் வேலைக்கு வைத்துக்கொள்ளமாட்டார்கள். திருட்டுத்தட்டானிடம் யார்தான் நகைசெய்யக்கொடுப்பார்? தவிரவும் வேலைக்காரன் நம்பிக்கையுள்ளவனுனல், அதைமேற்பார்ப்பவர்கள் குறைவர். அது எஜமானனுக்கு ஒருலாபமல்லவா. மேஸ்திரி சற்று வெளியேறினசமயத்திற் கரண்டியை எறிந்துவிட்டுச் சாவகாசமாய்ச் சருகுமெல்லவும், வம்படிக்கவும் போவதானல், அக்கொத்தனை யார் தான் வேலைக்கு வைத்துக்கொள்வார்?

17. ஆகையால் வேலைப்பயனை (productiveness of Labour) விருத்திசெய்ய அவசியமானவைகள் அடியிற்கண்டவாறு இருவகுப்பாகும்.

I. (1) வேலைவிபாகம்.
(2) கூட்டுவேலை.
(3) யந்த்ரம், ஆயுதம் முதலான உபகரணங்கள்.

II. (1) சாமர்த்தியம்.
(2) யுக்தி (அல்லது புத்தித்திறமை)
(3) யோக்யதை.
(4) நம்பிக்கை.

அத்யாயம் 4.

முதல்.
(Capital)

18. முதல் என்பதற்குப்பணம் என்றர்த்தமல்ல. பணம் என்பதற்குத் தானகவே செல்வவிருத்திசெய்யுந்தன்மை கிடையாது.

பண்டமாற்றலுக்கு ஒருஸாதனமாகவும், செல்வத்தின்மதிப்புக்கு ஓர் அளவாகவுமாத்திரம் பணம்விளங்குகின்றதென்று முன்கூறப்பட்டிருக்கின்றது. நீட்டலளவு, நிறையளவு முதலானவைகளைப்போல, பணம் ஒருவிதசங்கேதத்தாற் செல்வஅளவாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

19. முதல். செல்வவிருத்திக்குச் சாதகமாய், இதுவரை சேர்த்துவைத்திருக்கும் பொருளே முதல் எனப்படும். அதுபணரூபமாயுமிருக்கலாம், பண்டமாயுமிருக்கலாம். சரியானகாலத்தில், 10000 மூட்டை பருத்திவாங்கி வியாபாரத்துக்காகக் கிட்டங்கியில் அடைத்துவைத்திருந்தால், அப்பருத்தி ஒரு முதலாகும். யாதொருபணமுமில்லாத ஆட்டிடையனுக்கு அவன் வளர்க்கும் நூறுஆடுகளும் முதலாகும். கிருஷிகனுக்கு, சென்றவருஷம் சாகுபடிசெய்து சேகரிக்கப்பட்டநெல், இந்தவருஷ சாகுபடிக்கு முதல்ஆகும். இந்த வருஷம்சரியானகாலத்திற்பயிரிட்டுக் கார்த்திகை, மார்கழிமாதத்தில் அறுப்பானதானியத்திற் சிலபாகம் கூலிக்குச்செலவானதுபோக, மீத நெல்லைக் கிருஷிகன் சேர்த்துவைக்கிறான். அதிற் சிலபாகம் அடுத்த வருஷம் அறுப்புக்காலம்வரை தானும் தன்குடும்பமும் ஜீவிக்கச் செலவாகிறது. சிலபாகம் கிருஷிசாதனமான மண்வெட்டி, கலப்பை முதலான ஆயுதங்களும்,மாடுகளும், உரங்களும்வாங்க உதவுகின்றது. வைக்கோல் மாட்டுக்கு உதவுகின்றது. சிலபாகம் அடுத்தவருஷம் விதையாகவிதைக்கப்படுகின்றது. ஆகையாற் கிருஷிகனுக்கு இந்த வருஷ மீதநெல் அடுத்தவருஷத்துக்கு முதலாகின்றது. முற்காலத்தில் நெல்லையேகொடுத்துப் பண்டமாற்றிக்கொண்டிருந்தார்கள். நாகரீகமடைந்த தற்காலத்தில், நெல்லைப்பணமாக்கி அதைக்கொண்டு வேண்டிய பண்டம் வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

(தொடரும்).

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் பி.ஏ., பி.எல்.

மதிப்புரை.

---

1. துவாதசோபநிஷத்:—(தமிழ்மொழிபெயர்ப்பு.) இது வடமொழி உபநிடதங்கள் பலவற்றினுஞ்சிறந்த பன்னிரண்டு உபநிடதங்களை வேதக்கிரமத்தில் முறைப்படுத்தி அவற்றின் பொருளைச் சங்கர பாஷியத்தைத்தழுவிக் காலஞ்சென்ற நாகபட்டினம் வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ P. சுப்பிரமண்யசர்மா அவர்கள் தமிழ்நடையிலெழுதி வைத்தபடி ஷெயார் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ N. S. இராஜாராமையர் அவர்களால் அச்சிட்டுத் தமிழபிமானம்வாய்ந்த கானுடுகாத்தான் ஸ்ரீமான் சா. ரும. மு. சி. த. பெத்தாச்சிசெட்டியார் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதெனத் தெரிந்து சந்தோஷிக்கிறோம். இப்புத்தகம் வடமொழிகல்லாது உபநிடதப்பொருள்களைக் குருமுகமாகக்கேட்பவர்களுக்கு மிகவும் உதவிபுரியத்தக்கது. இதில் ஐதரேயம், தைத்திரீயம், கடம், சுவேதாசுவதரம், ஈசம், பிரகதாரணியகம், கேநம், சாந்தோக்கியம், ந்ருசிம்மதாபநீயம், பிரச்நம், முண்டகம், மாண்டூக்கியம் என்னும் பன்னிரண்டுபநிஷத்துக்களின் பொருள் எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை அச்சிட்டு முமுக்ஷுக்களுக்குபகரிக்கும்படி வேண்டும் பொருளுதவிபுரிந்த ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியார் அவர்களின் உபகாரசீலம் பாராட்டத்தக்கது.

---

2. வைத்தியகலாநிதி :— இது சென்னை ஆயுர்வேதகாலேஜ் புரொபஸர் மகா-ள-ள-ஸ்ரீ எம். துரைஸாமி ஐயங்கார் அவர்களால் மாதந்தோறும் தமிழில் வெளியிடப்படும் அருமையான வைத்தியப் பத்திரிகை. முதலிற் கிடைத்த இதன் ஆறுவது சஞ்சிகையையும் அதன்பின்கிடைத்த மற்றசஞ்சிகைகளையும் பார்த்ததில் சரீரதத்துவம், ரோகநிதானம், சிகித்சாமுறை, ஔஷதமுறை, ஆரோக்கியமுறை, இரசாயனசாஸ்திரம் , இவற்றின்விஷயங்களும் ஆங்கிலவைத்தியபண்டிதர்களாற் கண்டுபிடிக்கப்பட்ட பழையவும் புதியவுமாகிய பற்பலவிஷயங்களும் யுனானிவைத்தியமுறைமுதலிய வைத்தியசம்பந்தமான பல

விஷயங்களும் தமிழ்மக்கள் எளிதி லுணரும்படி மாதந்தோறும் 40 பக்கங்களுக்குக்குறையாமல் தமிழிலெழுதப்படுவதாகவும்ஒவ்வொரு சஞ்சிகையிலும் நான்காவது ஐந்தாவதுபாரங்கள் புத்தகரூபமாக அருமையான வைத்தியநூல்களை மொழிபெயர்த் தச்சிட்டுதவிவருவதாகவுந் தெரிந்து மிகுந்த சந்தோஷமடைகிறோம். இப்பொழுது சுச்ருதஸம்ஹிதையும், சார்ங்கதரஸம்ஹிதையும் மொழிபெயர்த்து வெளிப்படுத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட பத்திரிகை இதுவரை தமிழில் ஒன்றும் வெளிவராமையாலும் எல்லாராலும் விரும்பத்தக்க சரீரசுகத்துக்கு இது சாதகமாயிருப்பதாலும் இது தமிழ்நாட்டிற்கு மிகவும் அநுகூலமாயுள்ளது. இதில் வெளிவரும் விஷயங்கள்பலவும் தமிழ்மக்களும் வைத்தியர்களும் அவசியமறிந்துகொள்ளவேண்டியனவாயும் அனைவர்க்கும் ஆரோக்கியத்தையும் அறிவுவிர்த்தியையும் அளிப்பனவாயும் இருத்தலாற் படிக்கத்தெரிந்தபலர்க்கும் இது பயன்படத்தக்கது. இதன் வருடச்சந்தா ரூபா 3—12—0. வெளிநாடுகளுக்கு ரூபா 5—0—0. வேண்டுவோர் வைத்தியகலாநிதிஆபீஸ், வெங்கையர்தெரு, மதராஸ், இ. என்ற இடத்துக்கு எழுதிப்பெறலாம்.

மேற்கண்டபுத்தகங்களும் வேலூர்க்கோலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரிடமிருந்துவந்த "பிரணவப்பொருளறியாதபிரமன்" என்னுஞ் சிறுபுத்தகமும் பாண்டியன்புத்தகசாலையிற் சேர்ப்பிக்கப்பட்டன.

பத்திராதிபர்.